வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 01 27.06.2021 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 206 பக்கங்கள் : 16




## கைதாவோரை புனர்வாழ்வுக்கு உட்படுத்தும் புதிய நடைமுறைகள் நீக்கப்படுதல் அவசியம்

AMNESTY INTERNATIONAL

### சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 27

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அல்லது அவசரகால நிலையின் போது கைதுசெய்யப்பட்டவர்களைப் புனர்வாழ்வுக்கு உட்படுத்துதல் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட புதிய நடைமுறைகள் உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.

"சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கான தினத்தை"

15

## நேற்று 1,801 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஜூன் 27

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,801 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்

15

## கொரோனா தொற்றால் மேலும் 43 பேர் மரணம்!

கொழும்பு, ஜூன் 27

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான 43 பேர் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சின் தொற்று நோயி

15

# எந்தவொரு சதித் திட்டத்தாலும் அரசைக் கவிழ்க்கவே முடியாது



### பஸில் விரும்பினால் பாராளுமன்றத்துக்கு வர முடியும் என்கிறார் அமைச்சர் கெஹலிய

கொழும்பு, ஜூன் 27

"ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசு, நாட்டு மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் நிறுவப்பட்ட அரச் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சி செய்கின்ற அரசு. எனவே, எந்தவொரு சதித் திட்டத்தாலும் இந்த அரசைக் கவிழ்க்கவே முடியாது. இந்தத் தகவலை அரசுக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டுவோருக்குச் சொல்லி வைக்க விரும்புகின்றேன்."

15



## எரிபொருளின் விலையை உடனடியாகக் குறைக்கவும்

### அரசை வலியுறுத்தி எதிரணி போராட்டம்

கண்டி, ஜூன் 27

எரிபொருள் விலை அதிகரிப்பைக் கண்டித்தும் விலை அதிகரிப்பை மீளக் குறைக்குமாறு வலியுறுத்தியும் எதிர்க்கட்சியினர் கண்டியில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

15

## வெலிக்கடை கைதிகளின் போராட்டம் தொடர்கிறது!

கொழும்பு, ஜூன் 27

வெலிக்கடை சிறைச்சாலையின் கூரை மீதேறி கைதிகள் சிலர் ஆரம்பித்த எதிர்ப்பு நடவடிக்கை மூன்றாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்

15

## தடுப்பூசி ஏற்றிய இரு யுவதிகள் சாவகச்சேரி வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஜூன் 27

தடுப்பூசி செலுத்திய நிலையில் ஒவ்வாமையினால் பாதிக்கப்பட்ட இரண்டு யுவதிகள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள்

15

## கொரோனாவால் மேலும் ஐவர் யாழ்ப்பாணத்தில் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கொவிட்-19 நோயாளிகள் ஐவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன் தினம் இருவர் உயிரிழந்துள்ளனர் என்றும் நேற்று

15

## மாகாணங்கள் இடையே பொதுப் போக்குவரத்து அடுத்த வாரமும் இல்லை

கொழும்பு, ஜூன் 27

கோவிட்-19 தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக பொது போக்குவரத்து சேவைகளை அடுத்த வாரமும் மாகாணங்களுக்கு இடையே அனுமதிக்க முடியாது என்று கோவிட்-19 கட்டுப்பாட்டு செயலணி அறிவித்துள்ளது என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அதன்படி, பஸ் மற்றும் ரயில் சேவைகள் அடுத்த வாரம் மாகாணங்களுக்குள் மட்டுமே தொடர்ந்து இயங்கும் என்று அவர் குறிப்பிட்டார். நேற்று கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

### கொரோனாப் பரவலுக்கு மத்தியில்

## 3 நாட்களில் 70 கோடி ரூபாவுக்கு குடித்துத்தள்ளிய மதுப்பிரியர்கள்

கொழும்பு, ஜூன் 27

இலங்கையில் 3 நாட்களில் 70 கோடி ரூபாவுக்கு மதுபானம் விற்பனை செய்யப்பட்டுள்ளது என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரைவாசிக்கும் குறைவான மதுபானம் விற்பனை நிலையங்

15

## 'எக்ஸ் – பிரஸ் பேர்ல்' கப்பல் நிறுவனம் ஆரம்பகட்டமாக 72 கோடி ரூபா நட்டஈடு

கொழும்பு, ஜூன் 27

"எக்ஸ் - பிரஸ் பேர்ல்"கப்பல் நிறுவனம் ஆரம்ப கட்ட நட்டஈடாக 72 கோடி ரூபா வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை, சட்டமா அதிபரின் ஊடாக ஆரம்ப கட்ட நட்டஈடாக 4 கோடி அமெரிக்க

15



## இப்படியும் நடக்கிறது…!

தமிழக அமைச்சர் ஒருவர் மலைவாழ் மக்கள் வாழும் பகுதிக்கு முதன் முறையாகச் சென்றிருந்தார். அவரைப் பார்ப்பதற்காகக் கூட்டம் கூடியது.

கூட்டத்தினரைப் பார்த்து ஆரவாரமாகப் பேசத் தொடங்கினார்.

"உங்களுக்குத் தேவையான உதவிகளை இந்த அரசு செய்யும். அதற்கு நான் உறுதி தருகிறேன்" என்றார்.

கூட்டத்தினர் "ஓ! குவா! குவா!" என்று உரத்து குரல் எழுப்பினார்கள்.

"நல்ல பள்ளிக்கூடம் இங்கே அமைய நான் முயற்சி செய்கிறேன்" என்றார்.

கூட்டத்தில் "ஓ! குவா! குவா!" என்ற முழக்கம் எழுந்தது.

அப்படியே, மருத்துவமனை அமைக்கப் பாடுபடுவேன், உங்கள் ஒவ்வொருவருக்கும் வீடு கட்டித் தர ஏற்பாடு செய்கிறேன்.

என்று ஒவ்வொன்றாக அமைச்சர் சொல்லச் சொல்ல மக்களும் "ஓ.. குவா.. குவா.." என்று பதிலுக்கு கோஷமிட்டனர்.

கூட்டம் ஒரு வழியாக முடிந்தது.

பேசி முடித்த அமைச்சர் அங்கிருந்த பெரியவர்கள் சிலருடன் மலைப் பகுதியைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டார்.

சிறிது தூரத்தில் மேய்ந்து கொண்டிருந்த காட்டு எருமைகள் அவர் கண்களுக்குத் தெரிந்தன.

பக்கத்தில் இருந்த பெரியவரிடம் "நான் அருகே சென்று அவற்றைப் பார்க்கலாமா? ஆபத்து வராதே" என்று கேட்டார் அமைச்சர்.

அந்தப் பெரியவர் "அருகே செல்லலாம் ஓ! குவா! குவா ஆகிய இவற்றிடம் சிறிது கவனமாக இருக்க வேண்டும்" என்றார்.

தமிழக எழுத்தாளர் ஒருவர் எழுதிய குட்டிக்கதை இது.

பொசன் போயா தினத்தை முன்னிட்டு சில சிறைக்கைதிகள் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டனர்.

அவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களில் பதினாறு தமிழ் அரசியல் கைதிகளும் அடங்குவர். இவர்கள் அனைவருமே நீதிமன்றங்களினால் தண்டனை வழங்கப்பட்டு சிறைத்தண்டனையை அனுபவித்து வந்தவர்கள். வழக்குகள் முடிந்து குற்றவாளிகளாக தண்டனை வழங்கப்பட்டவர்களுக்கு மாத்திரமே ஜனாதிபதியால் பொது மன்னிப்பை வழங்க முடியும். இவ்வாறு சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்படுவது வழமையான ஒன்றுதான். ஆனால் வழக்கமாக சிறிய சிறிய குற்றங்களுக்கு தண்டனை வழங்கப்பட்டவர்களையே ஜனாதிபதி பொது மன்னிப்பில் விடுவிப்பது வழமை. ஆனால் இந்தத் தடவை, பயங்கரவாத சட்டத்தில் தண்டிக்கப்பட்டவர்களையும் விடுதலை செய்திருக்கிறார். அவர்களில் பலர் இன்னும் சில மாதங்களில் தண்டனைக் காலம் முடிவடைந்து விடுதலையாகவிருந்தவர்கள் என்கின்றன சில தகவல்கள். அவர்களோடு, கொலைக் குற்றவாளியான முன்னாள் எம்.பி. துமிந்த சில்வாவும் விடுதலை செய்யப்பட்டார். அவ்வளவுதான்.

ஆனால் இவ்வாறு விடுதலை செய்வதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, பாராளுமன்றத்தில் தமிழ் கைதிகள் விடுதலையை வலியுறுத்தி உரையாற்றியிருந்தார்.

அரசாங்கத்தின் முக்கிய அமைச்சரான அவர், பாராளுமன்றத்தில் இந்தக் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி நீண்ட உரையை ஆற்றியிருந்தார். பொசன் போயாவை ஒட்டி விடுதலை செய்யப்படுகின்ற கைதிகளின் விவரங்கள் முன்னதாகவே அவருக்குக் கிடைத்திருக்கலாம். அதனாலேயே அவர் பாராளுமன்றிலும் அவர்களின் விடுதலையை வலியுறுத்தி அவர் உரையாற்றியும் இருக்கலாம்.

நாமல், கைதிகள் விடயத்தில் இப்போது மாத்திரம் அக்கறை காட்டியவரல்லர். தான் சிறையில் இருந்தபோது அறிமுகமான தமிழ் அரசியல் கைதி ஒருவரின் வீடு தேடிப்போய் உதவி செய்தவர் அவர். அதேபோல பல தடவை இவர்களின் விடுதலையை வலியுறுத்தியும் இருக்கிறார்.

அது அல்ல கவனத்திற்குரியது, ஆனால் அந்த சம்பவங்கள் குறித்து எமது அரசியல்வாதிகள் எல்லோருமே தத்தமக்கு வந்த கருத்துக்களை கூறிவருகின்றனர்.

ஒரு கட்சியின் முக்கியஸ்தர், விடுதலை ஆன கைதிகளின் வாழ்வாதாரத்தில் கவனம் செலுத்த அனைத்துத்தரப்பினரிடமும் கோரிக்கை விடுக்கிறார். வெறும் பதினாறு பேரின் வாழ்வாதாரத்தைக்கூட செய்யமுடியாத நிலையில் நாம் இருக்கிறோம் என்பதை அந்த அறிவிப்பு புலப்படுத்தியது.

இன்னுமொருவர், நாமல் ராஜபக்ஷவால் பதினாறுபேரை விடுதலை செய்யமுடியுமெனில் மற்றவர்களை ஏன் விடுதலை செய்ய முடியாது என்று கண்டன அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அவரது அரசியல் 'அறிவு' அத்தகைய பெருமை மிக்கது.

இந்த அறிக்கையைப் படித்தபோதுதான் தமிழக எழுத்தாளரின் அந்தக் குட்டிக்கதை ஞாபகத்திற்கு வந்தது.

இந்த லட்சணத்தில்தான் இந்தத் தலைவர்கள் தமக்கு விடிவு தேடித்தருவார்கள் என்றும் சிலர் நம்பிக்கொண்டும், அவர்களைத் தலைவர்கள் என்று நம்பிக்கொண்டும் இருக்கின்றார்களா?

**- ஊர்க்குருவி**

# இலங்கை விடயங்களை கையாள்வதற்காக இந்தியா விசேட தூதரை நியமிக்கவேண்டும்

## சர்வதேச கருத்தரங்கில் தயான் ஜயதிலக யோசனை

கொழும்பு, ஜூன் 27



இலங்கையின் அண்மைக்கால விடயங்களில் இந்தியா அதிகளவில் கரிசனை கொண்டுள்ள நிலையில் இலங்கை விடயங்களை உயர்ந்த மட்டத்தில் கையாள்வதற்கு உடனடியாக விசேட தூதுவரை நியமிக்க வேண்டும் என இராஜதந்திரியான கலாநிதி தயான் ஜயதிலக யோசனை முன்வைத்துள்ளார்.

கொல்கத்தாவைத் தளமாக கொண்டு இயங்கும் திலோத்தமா அமையத்தின் ஏற்பாட்டில் 'இலங்கையில் சீனாவின் தலையீடு' என்ற தலைப்பிலான சர்வதேச கருத்தரங்கொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

பிரிட்டனுக்கான முன்னாள் தூதுவர் அம்ப் ருச்சி கானஷ்யம் வழிநடத்திய இந்த மெய்நிகர் கருத்தரங்கில் கலாநிதி தயான் ஜயதிலக, கொழும்பு பல்கலைகழகத்தின் சட்டபீட சிரேஷ்ட விரிவுரையாளர் திலினி பத்திரண, சிங்கப்பூர் பல்கலைக்கழகம் மற்றும் தெற்காசிய கற்கைகள் நிறுவனத்தின் ஆய்வாளர் டாக்டர் சுலனி அத்தநாயக்க ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, ஆரம்ப உரையாற்றிய கலாநிதி தயான் ஜயத்திலக்க மேற்கண்டவாறு யோசனையொன்றை முன்வைத்தார். அவருடைய நீண்ட உரையின் முக்கிய விடயங்கள் வருமாறு:

இலங்கையானது தெற்காசிய பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துமான இடத்தில் அமைந்திருக்கும் தீவாகும்.

இதனால் இலங்கையின் மீது பல நாடுகளுக்கு கரிசனைகள் அதிகமாகவே உள்ளன. அந்த வகையில், இலங்கை இதுவரை காலமும் அணிசேராக் கொள்கையை பின்பற்றி அனைத்து நாடுகளுடனும் இருதரப்பு உறவுகளை சுமூகமாகவே கொண்டு வந்திருந்தது.

ஆனால், இலங்கையின் தற்போதைய ஆட்சியாளர்கள் வெளிவிவகாரக் கொள்கையிலிருந்து விலகியிருக்கின்றார்கள். இதுபற்றிய பல கரிசணைகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

குறிப்பாக இலங்கை சீனாவின் பக்கம் சார்ந்து விட்டதாக பகிரங்கமான விமர்சனங்கள் உள்ளன.

சீனா தனது கனவுத்திட்டமான பட்டுப்பாதை திட்டத்தில் இலங்கையையும் இணைத்துக்கொண்டு தெற்காசியாவில் நகர்ந்து கொண்டிருக்கின்றது. அதுமட்டுமன்றி இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளுக்கும் கடன்தொகைகளையும் பாரிய அபிவிருத்தித்திட்டங்களிலும் முதலீடுகளைச் செய்து வருகின்றது.

அதற்கு மிகச்சிறந்த உதாரணமாக கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி திட்டத்தினைக் குறிப்பிட முடியும்.

இந்தத் திட்டம் இலங்கையின் எதிர்காலத்திற்கு முக்கியமானதாக கருதப்படுகின்ற போதும் இதனால் சீனாவின் தலையீடுகள் இலங்கையில் அதிகரித்து விடும் என்ற கரிசனை இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட மேற்குல நாடுகளுக்கு அதிகமாகவே உள்ளது.

குறிப்பாக இந்தியாவுக்கு அதன் தேசிய பாதுகாப்புடன் தொடர்புபட்ட விடயமாக உள்ளது. வடஇந்தியாவின் லடாக் பகுதியில் சீனாவுடனான எல்லை விவகாரங்கள் காணப்பட்டு வரும் நிலையில் தென் இந்தியாவில் அவ்விதமான நிலைமைகளை தவிர்ப்பதற்கு இந்தியா அதிகளவில் ஈடுபாட்டினைக் கொண்டிருக்கின்றது.

ஆனால், சீனாவைப் பொறுத்தவரையில் இலங்கை விடயத்தில் உயர்மட்ட நகர்வுகளையே மேற்கொண்டு வருகின்றது. இறுதியாக சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் வருகை தந்திருந்தார். அதற்கு முன்னதாக கம்னியூஸ்ட் கட்சியின் வெளிவிவகாரங்களுக்கான பிரதிநிதி வருகை தந்திருந்தார்.

இவ்விதமான விஜயங்கள் இலங்கையுடன் உயர்மட்ட அணுகுமுறைகளை முன்னெடுப்பதற்கு சீனாவுக்கு வாய்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. இதனைவிடவும், சீனாவின் கம்னியூஸ்ட் கட்சியானது இலங்கையின் ஆளும் கட்சியாக இருக்கும் பொதுஜனபெரமுனவுடன் இருதரப்பு தொடர்புகளை மேற்கொள்ள ஆரம்பித்திருக்கின்றது.

இவ்விதமான சீனாவின் உயர்மட்ட அணுகுமுறைகளுக்கு நிகராக இந்தியாவின் அணுகுமுறைகள் அண்மைய காலங்களில் காணப்படவில்லை. 80களில் இலங்கை விடயத்தில் இந்தியாவின் அணுகுமுறைகள் முற்றிலும் மாறுபட்டதாகவே இருந்தது. விசேட கவனம் கொள்ளப்பட்டு விசேட பிரதிநிதிகள் அமர்த்தப்பட்டு இலங்கை விடயங்கள் கையாளப்பட்டன.

ஆனால் பின்னரான நிலைமையில் அவ்விதமான செயற்பாடுகள் இடம் பெற்றிருக்கவில்லை. இந்தியா வெளிவிவகார கலாநிதி.ஜெய்சங்கரின் இலங்கை விஜயம் கூட சீனாவின் உயர்மட்டக்குழுவின் விஜயத்துடன் ஒப்பிடும்போது தாக்கத்தினை ஏற்படுத்தியது என்று கணிக்க முடியாது.

தற்போதைய மத்திய அரசாங்கத்தில் வெளிவிவகர அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி ஆகியோர் இலங்கை விடயத்தில் நீண்ட அனுபவம் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். அவ்வாறிருக்க, இலங்கை விடயங்களை கையாள்வதற்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள விசேட தூதுவர் ஒருவரை நியமிப்பதே பொருத்தமானதாகும். இத்தகைய நியமனம் ஒன்றின் ஊடாக இலங்கை விடயங்களை கையாள்வதே இந்தியாவுக்கு தற்போதுள்ள இராஜதந்திர மூலோபாயத் தெரிவாக இருக்கும் என்பது எனது யோசனையாகவுள்ளது - என்றார்.

# தீர்மானம் பஸில் கையில்!

கொழும்பு, ஜூன் 27

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரும் தேசிய அமைப்பாளருமான பஸில் ராஜபக்ஷ பாராளுமன்றத்துக்குச் செல்வதா இல்லையா என்பதை அவரே தீர்மானிக்கவேண்டும்.

இதுவரை அவ்விதமாக கலந்துரையாடல்கள் எதுவுமே கட்சியினுள் இடம்பெறவில்லை என்று பொதுஜன பெரமுனவின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்தார்.

பஸில் நாடு திரும்பியுள்ள நிலையில், அவர் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்வதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளவுள்ளதாக வெளியாகிக்கொண்டிருக்கும் தகவல்கள் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பஸில் ராஜபக்ஷ எமது கட்சியின் ஸ்தாபகத்தலைவர். அவர் அரசியல் சிரேஷ்டத்துவமும் கொண்டவர். அவர் ஆட்சியை அமைப்பதற்காக மேம்பட்ட பணியை ஆற்றியுள்ளார்.

அவ்விதமானவர் பாராளுமன்றத்துக்கு செல்வது தொடர்பில் இதுவரை எம்முடன் எவ்விதமான கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவில்லை. அவர் பாராளுமன்றம் செல்லும் தீர்மானமொன்றை எடுப்பாராயின் அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். ஆனால் இந்த விடயத்தில் அவரே தீர்மானம் எடுக்க வேண்டியவராக உள்ளார்.

இதேவேளை, வெவ்வேறு விதமான ஊடகங்களில் திரிபுப்படுத்தப்பட்ட தகவல்கள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

அவை அனைத்துமே உத்தியோகப்பற்றற்றதும் உறுதியற்றதுமானவை ஆகும்-என்றார்.

(அ)

ஈழநாடு
Eelanadu
27.06.2021 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆனி 13

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# சர்வதேசத்திற்கு அடிபணிய மாட்டோம்!

ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் ஒரு விடயத்தை வலியுறுத்தியிருக்கின்றார். அதாவது, உள்நாட்டு விவகாரங்களில் வெளியாரின் தலையீடுகளை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. இந்த உரையை ஆற்றுவதற்கு முன்னர், தூக்கு தண்டை விதிக்கப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யும் உத்தரவை ஜனாதிபதி பிறப்பித்திருந்தார். துமிந்த சில்வா, 2011இல் தனது கட்சியை சேர்ந்த பாரத லக்ஷ்மன் என்னும் அரசியல்வாதியை படுகொலை செய்திருந்தார். இந்த வழக்கில் துமிந்த சில்வா குற்றவாளி என்பதை உறுதிப்படுத்தி, 2016இல் இவருக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

94 சிறைக் கைதிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியிருந்தார். இவர்களில் 16 பேர், விடுதலைப் புலிகளுடன் தொடர்பானவர்கள் என்னும் அடிப்படையில், பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு, நீண்ட காலமாக சிறைகளில் இருந்தவர்கள். இவர்களோடு சேர்த்தே துமிந்த சில்வாவும் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார். வழமையாக மனித உரிமைகள், ஜனநாயகம்பற்றி பேசும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் வாயடைத்துப் போயிருக்கின்றனர்.

கூட்டமைப்பின் பங்காளிக் கடசியான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நன்றி தெரிவித்திருக்கின்றார். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானால் 'வெள்ளை வான்' வருமென்று பிரச்சாரம் செய்தவர்களே, இப்போது அவரை வாழ்த்தி அறிக்கை வெளியிடுகின்றனர். உண்மையில், தமிழ்க் கைதிகள் எவருமே அரசியல் கைதிகள் என்னுமடிப்படையில் விடுதலை செய்யப்படவில்லை. துமிந்த சில்வாவுடன் சேர்த்து, தமிழ் கைதிகள் விடுதலை செய்யப்பட்டமையால், தென்னிலங்கை சிங்கள தேசியவாத தரப்பினர் மத்தியில் இது பெரியளவில் பேசு பொருளாகவில்லை.

துமிந்த சில்வா விடுதலை செய்யப்பட்டமை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் தனது கண்டனத்தை பதிவு செய்திருக்கின்றார். அதேபோன்று, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலைனாவும் தனது டுவிட்டர் பக்கத்தில் துமிந்தவின் விடுதலையை கண்டித்திருக்கின்றார். இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இதனை கண்டித்திருக்கின்றது. இது, சட்டத்தின் ஆட்சியை பலவீனப்படுத்தும் ஒரு செயலாகும் என்பதையே, அனைவரும் சுட்டிக் காட்டியிருக்கின்றனர். ஆனால், ஜனாதிபதியோ அல்லது அவரது அரசாங்கமோ சர்வதேச சமூகம் குறித்து கவலைப்படவில்லை. சர்வதேசத்தின் விமர்சனங்களையும் கண்டுகொள்ளவில்லை. துமிந்த சில்வாவின் விடுதலை, இதற்கான ஓர் எடுத்துக்காட்டாகும்.

இந்த விடயத்தை நடைமுறைப்படுத்திய பின்னரே, ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு விசேட உரையொன்றையும் ஆற்றியிருக்கின்றார். அந்த உரையில் தனது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்தியிருக்கின்றார். ஒரு விடயத்தை செய்துவிட்டு, அதன் பின்னர் தனது நிலைப்பாட்டை வெளிப்படுதியிருக்கின்றார்.

16 தமிழ் கைதிகளை விடுவித்ததன் மூலம், மறைமுகமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பையும், தமிழ் தேசிய கட்சிகளையும் துமிந்த சில்வாவின் விடுதலையை ஏற்றுக்கொள்ளுமாறும் செய்திருக்கின்றார். உண்மையில், இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில் சர்வதேச அரங்குகளில் குரல் கொடுப்பவர்கள் தமிழர் தரப்பு மட்டுமே! அந்த தரப்பின் வாயை மூடும்வகையில் ஜனாதிபதி மிகவும் நுட்பமாக காய்களை நகர்த்தியிருக்கின்றார். இப்போது இதனை தமிழ் தேசிய தரப்புக்கள் விமர்சித்தால், ஏனைய கைதிகளின் விடுதலை தொடர்பில் பேசமுடியாதுபோகும்

# ஜனாதிபதியின் நாட்டு மக்களுக்கான உரை!



- அலசுவது **இராஜதந்திரி** -

இலங்கை சுதந்திரம்பெற்ற நாளிலிருந்து பிரிட்டிஷார் ஏற்படுத்தி விட்டுச்சென்றிருந்த பொருளாதார மற்றும் சமூக கட்டமைப்பிலேயே இன்றுவரை பெரிதும் சார்ந்திருப்பதோடு, அண்மைக் காலங்களில் கிழக்கிலிருந்து ஊடுருவியுள்ள சீனாவின் செல்வாக்கிற்குட்பட்ட நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது வாசஸ்தலத்திலிருந்து நாட்டு மக்களுக்கு நேற்று முன்தினம் உரையாற்றியபோது, எந்தவொரு வடிவிலும் வெளிநாட்டு தலையீடுகளுக்கு அனுமதிக்கப்போவதில்லை என்று தெரிவித்திருந்தார்.

வெள்ளை மாளிகை வளவிலிருந்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உரையாற்றுவதுபோலவும், இந்திய பிரதமர் நரேந்திர மோடி தமது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலிருந்து இந்திய மக்களுக்கு உரைநிகழ்த்துவதுபோலவும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது வாசஸ்தலமான அலரி மாளிகையின் வெளிப் புல்தரையிலிருந்து நாட்டு மக்களுக்கு நேற்று முன்தினம் உரையாற்றியிருந்தார்.

ஜனாதிபதியின் உரைக்கு முன்பதாக, கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலை கூரைமீதேறி அங்கே சிறை வைக்கப்பட்டுள்ள மரண தண்டனைக் கைதிகள் தம்மோடு சிறையிலிருந்த மரண தண்டனைக் கைதியான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருப்பதுபோல, தாமும் விடுதலை செய்யப்படவேண்டுமென கூச்சலிட்டிருந்தனர்.

**கைதிகளின் கூச்சல்**

வெலிக்கடை சிறைச்சாலையில் ஏறி நின்று கூச்சலிட்ட மரண தண்டனைக் கைதிகள் அரசாங்கத்தை திட்டித்தீர்க்கும் பதாகைகளையும் கையிலேந்தியிருந்தனர்.

எனவே, ஒருபுறம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டின் இன்றைய அரசியல், பொருளாதார நிலபரங்கள் தொடர்பாக தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி நாட்டு மக்களுக்கு உரையாற்றுவதற்கு முன்பதாக, நாட்டில் அராஜகம் இழையோடியிருக்கின்றது என்ற தொனியில் வெலிக்கடை சிறையிலுள்ள மரண தண்டனைக் கைதிகள் தமது ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்தனர்.

வெலிக்கடை சிறச்சாலை கைதிகளின் ஆர்ப்பாட்டத்தை நோக்கும்போது, நாட்டின் நீதித்துறை, சட்டம், ஒழுங்கு என்பவை கேலிக்கூத்தாக மாறியிருப்பதையே அறியமுடிகின்றது. இலங்கையின் முதலாவது பெண் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க 2013ஆம் ஆண்டு அன்றைய ஜனாதிபதியும் இன்றைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவினால் பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பாக பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தார். நீதித்துறையில் அரசியல் தலையீடுகளை அனுமதிக்காமையால் அன்றைய பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கமீது பலதரப்பட்ட போலியான குற்றச்சாட்டுகள் சிருஷ்டிக்கப்பட்டே அவர் அன்று பதவியிலிருந்தும் அகற்றப்பட்டிருந்தார்.

அன்று ஷிராணி பண்டாரநாயக்க பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தமையை இலங்கையின் ஜனநாயக அமைப்புகள் மட்டுமல்ல. சர்வதேச சமூகமும் வெகுவாக சாடியிருந்தது.

**நீதித்துறை மீதான தாக்குதல்**

இலங்கையின் நீதித்துறைமீதான பாரிய தாக்குதல் என்றே, நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பதவி நீக்கப்பட்ட விவகாரம் அரசியல் அவதானிகளால் வர்ணிக்கப்பட்டிருந்தது. ஷிராணி பண்டாரநாயக்கா பதவி நீக்கப்பட்ட பின்னரே அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் படிப்படியாக ஆட்டம் காணத்தொடங்கியிருந்தது.

தற்போது மற்றொரு வடிவில் நீதித்துறை மீது கைவைக்கப்பட்டுள்ளது. இலங்கையின் உயர் நீதிமன்ற தீர்ப்பையே எள்ளிநகையாடும் விதத்தில் மற்றுமொரு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவை பேரணியொன்றின்போது சுட்டுக் கொலை செய்தமை தொடர்பாக உயர் நீதிமன்றினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் புள்ளியான துமிந்த சில்வா விடுதலை செய்யப்பட்டுள்ளார். மரணதண்டனை விதிக்கப்பட்டு நான்கு வருடங்களுக்கு பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பொது மன்னிப்பின் அடிப்படையில் துமிந்த சில்வா விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

**வெளி நாடுகளின் தலையீடு**

இவ் விடுதலையை தொடர்ந்து, தற்போதைய நாட்டு நிலபரம் தொடர்பாக நாட்டு மக்களுக்கு உரையாற்றியபோதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையில் வெளிநாடுகளின் தலையீடுகளுக்கு இடம்கொடுக்கப்போவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார். 2019ஆம் ஆண்டில் ஆட்சிக்குவந்த நாளிலிருந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி ஓர் எதேச்சையான போக்கைக் கொண்டிருப்பதாகவே அரசியல் விமர்சகர்களால் விமர்சிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் செயலகத்துக்கு நேர் எதிரே, காலிமுகத் திடலை அண்டியதாக சீனாவின் துறைமுக நகரத்திட்டம் உருவாகி வருகின்றது. அத்துடன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் அமெரிக்காவில் வதிவிட உரிமையையும் கொண்டுள்ளனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜூன் - 27 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - ஆனி 13
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 4.30 - 6.00
திதி : திரிதியை




**மேடம்**
சவால்களை வென்று நிம்மதியடைவீர்கள். நன்மைகள் கூடும்.பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமிதம் தரும். அமைதியான நாள். கோபத்தை குறைத்து குணத்தை அதிகரித்துக் கொள்ளுங்கள்.

**இடபம்**
இங்கிதமான பேச்சால் மற்றவர்களைக் கவருவீர்கள். உங்களிடம் உள்ள கவரும் தன்மையால் வெற்றி பெறுவீர்கள். குடும்ப நபர்களுடன் சற்று அனுசரித்து செல்ல வேண்டும்.

**மிதுனம்**
பிள்ளைகளால் ஏற்பட்ட பயம் அர்த்தமற்றது என்று புரியும். மனதில் தெளிவு உண்டாகும். சிறு அலைச்சல் உண்டு. வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு நிம்மதியளிக்கும் செய்தி வரும்.

**கடகம்**
உறவினர்களால் சற்று உணர்ச்சிவசப்படும் நிலை ஏற்படக்கூடும். சில விஷயங்களை இன்று போராடி முடிக்கவேண்டி வரும். புதிய பொருட்கள் வாங்குவீர்கள். உழைப்பினால் ஆதாயம் உண்டு.

**சிம்மம்**
புதிய பாதையில் செல்வீர்கள். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். நன்மை அடைய மிகவும் முயற்சி செய்ய வேண்டிவரும். புத்துணர்ச்சி பெறுவீர்கள். உற்றவர்கள் ஓரளவு ஒத்துழைப்பர்.

**கன்னி**
பல காலம் சந்திக்காத நண்பர், உறவினரை சந்தித்து மகிழ்வீர்கள். வாழ்க்கைத்துணைக்கு நற்செய்தி ஒன்று தேடி வரும். சில வேலைகளை முடிக்க சற்றுத் திணறுவீர்கள்.

**துலாம்**
வீட்டில் உள்ள பொருட்கள் பழுதாகி இன்றைக்கே சரிசெய்வீர்கள். தந்தைவழி சொத்து சம்பந்தமான முயற்சியில் ஆதாயம் உண்டு. பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். விட்டுக் கொடுங்கள்.

**விருட்சிகம்**
சமீபத்தில் ஏற்பட்டிருந்த பிரச்னைகள் அனைத்தும் நீங்கும். தேவையான உதவிகளைச் செய்து மன நிறைவு அடைவீர்கள். திட்டமிட்ட விஷயத்தில் தைரியத்துடன் ஈடுபடலாம்.

**தனுசு**
பதவி உயர்வுக்காக உங்களுடைய பெயர் பரிசீலிக்கப்படும். நெருங்கியவரின் ஆசையை நிறைவேற்றி அவரின் பிரமிப்புக்கு ஆளாவீர்கள். முயற்சித்த விஷயம் முடிவதற்குத் தாமதமாகும்.


**மகரம்**
வெளிமாநிலம் சென்றவர்கள் வெற்றியுடன் திரும்பி வருவீர்கள். வீட்டில் ஒருவருக்குப் பழைய நண்பரால் ஆதாயம் உண்டு. மற்றவருடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படாதபடி பேசுங்கள்.

**கும்பம்**
உங்கள் செயல்பாடுகள் சிறப்பாக இருந்தாலும் வெற்றி தாமதமாகும். நல்ல மனம் உள்ள உறவினரைச் சந்தித்து மகிழ்வீர்கள். வீடு, வாகனம் வாங்கும் யோகம் சற்றுத் தள்ளிப்போகும்.

**மீனம்**
பிறருக்கு உதவி செய்வீர்கள். சமூக சேவையில் ஈடுபடுவீர்கள். வெற்றிக்காக முயற்சியை அதிகப் படுத்தவேண்டி வரும். எதிர்பார்த்த ஒவ்வொரு நன்மையும் தாமதித்தே வந்தடையும்.

### உள்ளாட்சித் தேர்தலுக்கு ஆயத்தம்

# கட்சிக்கு புதிய நிர்வாகிகளை நியமனம் செய்த கமல்ஹாசன்



சென்னை, ஜூன் 27

மக்கள்நீதி மய்யத்தின்புதிய நிர்வாகிகளை அந்தக் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவைத் தேர்தல் தோல்விக்குப் பிறகு, மகேந்திரன், சந்தோஷ் பாபு, முருகானந்தம் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் அடுத்தடுத்து மக்கள் நீதி மய்யம் கட்சியி லிருந்து விலகினர். இதையடுத்து, மக்கள் நீதி மய்யம் கட்சியை வலுப்படுத்தத் தேவையான மாற்றங்களைச் செய்வேன் எனக் கடந்த மாதம் 24ஆம் திகதி காணொலிக் காட்சி வாயிலாகக் கட்சி உறுப்பினர்க ளிடம் கமல்ஹாசன் தெரிவித்தார்.

இந்நிலையில், நேற்று நடந்த இணையவழிக் கலந்துரையாடலில் கமல்ஹாசன் உரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:

”கட்சி உறுப்பினர்களும், நிர்வாகிகளும் தங்களது உடல்நலனில் முழு கவனம் செலுத்த வேண்டும். தடுப்பூசி போட்டுக்கொள்ளாதவர்கள் உடனடியாகத் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

மண், மொழி, மக்கள் காக்க களம் கண்ட நமது கட்சியை வலுப்படுத்தவும், நமது கொள்கைகளை, செயல் திட்டங்களை மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்கவும் சில புதிய நியமனங்களைச் செய்திருக்கிறேன். அதன்படி, கட்சியின் தலைவர் எனும் பொறுப்புடன் கூடுதலாகக் கட்சியின் பொதுச் செயலாளர் எனும் பொறுப்பினையும் ஏற்றுப் பணியாற்ற இருக்கிறேன்.

புதிதாக இரு அரசியல் ஆலோசகர்கள், இரண்டு துணைத் தலைவர்கள், மூன்று மாநிலச் செயலாளர்கள், நிர்வாகக் குழுவில் மேலும் ஒரு உறுப்பினர், நற்பணி மன்ற ஒருங்கிணைப் பாளர் ஆகிய பதவிகளுக்கு நிர்வாகிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், சில அறிவிப்புகள் இனிவரும் நாட்களில் வெளி யாகும்.

புதிய மாநிலச்செயலாளர்கள் ஏற்கெனவே நமது கட்சியின் வேட்பாளர்களாகக் கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் களம் கண்டவர்கள்தான். புதிய நியமனங்கள்:

1. பழ.கருப்பையா- அரசியல் ஆலோசகர்
2. பொன்ராஜ் வெள்ளைச்சாமி - அரசியல் ஆலோசகர்
3. ஏ.ஜி.மௌரியா - துணைத் தலைவர் - கட்டமைப்பு
4. தங்கவேலு - துணைத் தலைவர் - களப்பணி மற்றும் செயல்படுத்துதல்.
5. செந்தில் ஆறுமுகம் - மாநிலச் செயலாளர் - தகவல் தொழில்நுட்பம், செய்தித் தொடர்பு.
6. சிவ.இளங்கோ - மாநிலச்செயலாளர் - கட்டமைப்பு.
7. சரத்பாபு - மாநிலச்செயலாளர் - தலைமை நிலையம்.
8. ஸ்ரீப்ரியா சேதுபதி - நிர்வாகக் குழு உறுப்பினர்
9. ஜி.நாகராஜன் - நற்பணி இயக்க ஒருங்கிணைப்பாளர்

மக்கள் சேவைக்காக வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட தலைமைப்பண்புமிக்க இவர்களை என்னோடு சேர்ந்து நீங்களும் வாழ்த்தி வரவேற்பு செய்யுங்கள். முழு ஒத்துழைப்பை நல்குங்கள். இவர்கள் உங்களோடு சேர்ந்து உழைத்துக் கட்சியினை வலுவாக்குவார்கள். உள்ளாட்சித் தேர்தல் விரைவில் நடைபெற இருக்கிறது. அதற்கு நாம் தயாராக வேண்டும்-என்றார்.

# தமிழகத்தில் இதுவரை இல்லாத வகையில் மாவட்ட ஆட்சியாளர்களாக 11 பெண்கள்!

சென்னை, ஜூன் 27

தமிழ்நாட்டில் கடந்த வாரத்தில் பல ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் மாற்றப்பட்டனர். இதில் பலரும் ஆச்சரியத்துடன் பார்க்கும் விடயம், தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்ட ஆட்சித் தலைவர்களில் 11 பேர் இளம் பெண் ஐ.ஏ.எஸ் அதிகாரிகளை நியமித்திருப்பது தான்.

இதைத்தவிர, மாநகராட்சி ஆணையர், ஊரக வளர்ச்சி திட்ட இயக்குநர் என பத்துக்கும் மேற்பட்ட இளம் பெண் ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் நான்கு செயலாளர்களில் ஒருவராக பெண் ஐ.ஏ.எஸ் அதிகாரி அணு ஜோர்ஜ் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் பத்துக்கும் மேற்பட்ட பெண் ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களாகப் பதவி ஏற்றிருப்பது இதுவே முதல்முறை என்கின்றனர்.

# தமிழகத்தில் டெல்டா பிளஸ் தொற்றினால் ஒருவர் மரணம்!

சென்னை, ஜூன் 27

தமிழகத்தில் டெல்டா பிளஸ் தொற்றினால் ஒருவர் மரணமாகியுள்ளார்.

கொரொனா வைரஸ் தொற்று தமிழகத்தில் குறைந்து வரும் நேரத்தில், ஊரடங்கு கட்டுப்பாடு விதிகளும் தளர்த்தப்பட்டு வருகிறது. இதையடுத்து, பல மாநிலங்களில் டெல்டா பிளஸ் வைரஸ் பாதிப்பு ஏற்பட்டு வரும் நிலையில், காஞ்சிபுரம் மற்றும் மதுரையை சேர்ந்த இருவருக்கு அந்த தொற்று உறுதியாகி உள்ளது.

மேலும், சென்னை கோட்டூரை சேர்ந்த தாதிக்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டு அவர் குணமடைந்துள்ளார். அதேபோல காஞ்சிபுரத்தை சேர்ந்தவரும் குணமடைந்துள்ளார். ஆனால், மதுரையை சேர்ந்தவர் தான் சிகிச்சை பயனின்றி உயிரிழந்து உள்ளார்.

அதன்பின் அவரது ரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பெங்களூர் மரபணு ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டது. அந்த பரிசோதனை முடிவில் டெல்டா பிளஸ் பாதிப்பு உறுதியானது.

கொரோனா பாதிப்பு அதிகம் உள்ள பகுதிகளில் மாதம்தோறும் டெல்டா பிளஸ் தொற்று பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என முதல்வர் உத்தரவிட்டுள்ளார். இதற்கான பரிசோதனை மையங்கள் நாடு முழு தும் 14 இடங்களில் மட்டுமே உள்ளன. அவையும் மத்திய அரசு கட்டுப்பாட்டில் உள்ளன. இதனைத்தொடர்ந்து, தமிழகத்தில் டெல்டா பிளஸ் வைரசால் ஒன்பது பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

# விளையாட்டு வீரர்களுக்கு தடுப்பூசி; மு.க.ஸ்டாலின் ஆரம்பித்து வைத்தார்

சென்னை, ஜூன் 27

சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் விளையாட்டு வீரர்களுக்கான கொரோனா தடுப்பூசி முகாமை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்.

18,000 வீரர்களில் 10 ஆயிரம் பேர் தடுப்பூசி போட்டுக்கொண்ட நிலையில் மீதி உள்ளவர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் 6 விளையாட்டு வீரர்களுக்கு தலா ரூ.5 லட்சம் ஊக்கத் தொகையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

# யாழ். குடாவில் 5 நாட்களில் மேலும் 10 பேரை பலியெடுத்த கொரோனா

## மொத்த பலி 75 ஆக உயர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ். குடாநாட்டில் கடந்த 5 நாட்களில் மட்டும் மேலும் 10 பேர் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்துள்ளனர்.

கடந்த ஜூன்-20 ஆம் திகதி முதல் ஜூன்-24 வரையான 5 நாடகளில் இவ்வாறு 10 பேர் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்துள்ள னர்.

இதையடுத்து இதுவரையான நாட்களில் யாழ். குடாநாட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தவர்களது மொத்த எண்ணிக்கை 75 ஆக உயர்ந்துள்ளது.

அத்துடன் யாழ். குடாநாட்டில் கொரோனா அச்சுறுத்தல் தொடர்ந்து வரும் நிலையில் கடந்த 24 நாட்களில் மட்டும் 35 பேர் உயிரிழந்துள்ளதுடன், 1977 பேருக்கு தொற்று உறுதி செய்யபபட்டுள்ளது.

ஜூன்-01 ஆம் திகதி முதல் ஜூன்-24 வரையான நாட்களீல் இவ்வாறு கொரோனாத் தொற்று காரணமாக 35 பேர் உயிரிழந்துள்ளடன் மேலும் 1977 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

**உயிரிழப்பு விபரம்**

ஜூன் - 01 - 03 பேர், ஜூன் - 02 - 02 பேர், ஜூன் - 03 - ஒருவர், ஜூன் - 04 - 02 பேர், ஜூன் - 07 - 02 பேர், ஜூன் - 08 - ஒருவர், ஜூன் - 09 - ஒருவர், ஜூன் - 10 - ஒருவர், ஜூன் - 12 - ஒருவர், ஜூன் - 12 - 02 பேர், ஜூன் - 14 - 02 பேர், ஜூன் - 16 - 03 பேர், ஜூன் - 17 - 02 பேர், ஜூன் - 18 - 02 பேர், ஜூன் - 20 - ஒருவர் ஜூன் - 21 - 03 பேர், ஜூன் - 22 - 03 பேர், ஜூன் - 23 - ஒருவர், ஜூன் - 24 - 02 பேர்

**மொத்த உயிரிழப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு வாரியாக**

யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் - 20 பேர், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் - 11 பேர், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் - 09 பேர், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் - 08 பேர், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் - 06 பேர், உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் - 05 பேர், சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் - 04 பேர், கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் - 03 பேர், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் - 03 பேர், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் - 03 பேர், ஊர்காவற்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் - ஒருவர், காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் - ஒருவர், வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் - ஒருவர்.

(அ)

# இலங்கையில் தொடர்கின்றன சித்திரவதைகள்!




## யஸ்மின் சூகா அறிக்கை

கொழும்பு, ஜூன் 27

**இலங்கையில் போர் முடிவுக்கு வந்து பன்னிரண்டு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், தமிழர்கள் வெள்ளை வாகனங்களில் கடத்தப்பட்டு, இரத்தக்கறை படிந்த சித்திரவதைக் கூடங்களில் விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுவது இன்னமும் தொடர்கின்றது என யஸ்மின் சூகா தலைமையிலான உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயற்திட்டம் தெரிவித்துள்ளது.**

சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச ஆதரவு நாள் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இதனையொட்டி உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயற்திட்டம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் அல்ல! இலங்கை சித்திரவதை” என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் கீழ் செயற்படும் பாதுகாப்புப் படைகளால் தமிழர்கள் கடத்தப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட பல அண்மைய சம்பவங்களை உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயற்திட்டம் விசாரணை செய்துள்ளது.

அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களிலும் இதர செயற்பாடுளிலும் ஈடுபட்டவர்கள் வேறு யார்? இப்படியான செயற்பாடுகளைச் செய்வதற்கு காணாமற்போனவர்களின் குடும்பங்களுக்கு உதவியது யார்? என அரைகுறைத் தமிழில் அவர்கள் கேட்டார்கள்” என பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் கூறினார்.

மோசமான பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டபோது அவருக்கு 19 வயதே ஆகியிருந்தது. பிரித்தானியா வந்தடைந்த பின்னர் பாதிக்கப்பட்டவர்களில் மூவர் தற்கொலைக்கு முயற்சி செய்துள்ளார்கள்.

உருமறைப்பு ஆடையில் வந்தவர்கள் பச்சை நிற இராணுவ வாகனம் ஒன்றுக்குள் தள்ளிக் கடத்திச் சென்று, பின்னர் சித்திரவதைசெய்து, திரும்பத் திரும்பப் பாலியல் வன்புணர்வுக்கு ஆளாக்கினார்கள். இது தன்னைத் தற்கொலை செய்துகொள்ளத் தூண்டியது என பதின்ம வயதுத் தமிழர் ஒருவர் விவரித்தார். தான் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடத்தில் மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் இருந்ததாகவும் அவர் மேலும் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்-

“அவர்கள் என் கண்களைக் கட்டியிருந்த துணியை அகற்றினார்கள். நிலத்தில் முழங்காலில் மண்டியிட்ட நிலையில் நான் இருந்தேன். என்னை வீட்டிலிருந்து கடத்திச்சென்ற படைவீரரும், இன்னும் இருவரும் அங்கே இருந்தார்கள். அவர்களுடன் அதிகாரி போன்று தோற்றமளித்த இன்னொருவரும் எனக்கு முன்னால் இருந்தார். அவர் இராணுவ அதிகாரி போன்று இருந்தார் என்று நான் சொல்வதற்குக் காரணம் அவர் வெறும் பச்சைநிற இராணுவச் சீருடை அணிந்திருந்தார். அவருடைய மார்பில் சில பதக்கங்களும் அவருடைய தோள்பட்டையில் சில நட்சத்திரங்களும் காணப்பட்டன.”-என்றார்.

2019 இன் இறுதிப்பகுதியில் இராணுவத்தால் சித்திரவதைக்குள்ளாகி, பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு பிரித்தானியாவுக்குத் தப்பிவந்த இன்னொரு இளவயதுத் தமிழர் ஒருவரும் தன்னை மூவர் கடத்தியதாகவும் ஒருவர் இராணுவ சீருடையில் இருந்ததாகவும் கூறினார்:

“அவர்கள் என்னைப் பிடித்து இழுத்து, கைகளை முதுகுக்குப் பின்னால் கட்டி, வாகனம் ஒன்றுக்குள் தள்ளி, கண்களைத் துணியால் மூடிக் கட்டினார்கள்” என அவர் கூறினார்.

பயங்கரவாத விசாரணைப்பிரிவால் அண்மையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஒருவர் தான் தடுத்துவைக்கப்பட்டிருந்த இடத்தை அடையாளம் காண்பித்தார். அத்துடன் காவல்நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்து மீண்டும் மீண்டும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட கட்டடத்தையும் அடையாளப்படுத்தினார்.

“அவர் என்னுடைய முதுகிலும் கீழ்க்காலிலும் உலோகக் கம்பியால் சூடுவைத்தார். அவர் கையுறைகள் அணிந்திருந்தார். அவர் எங்கிருந்து அவ் உலோகக் கம்பியைக் கொண்டுவந்தார் என்பதையோ, எவ்வாறு அதனைச் சூடாக்கினார் என்பதையோ நான் காணவில்லை. நான் வலியில் கத்தினேன், காயங்களின் எரிவு பல வாரங்களுக்கு இருந்தது” என்று சித்திரவதைகளிலிருந்து தப்பி வந்த ஒருவர் கூறினார்.

மேலும் தன்னை கைகளையும் கால்களையும் ஊன்றியவாறு மண்டியிடவைத்த பயங்கரவாத முறியடிப்புப் பிரிவு மலவாசல் வழியாக உலோகக் கம்பியைச் செலுத்தியதாகவும் அவர் கூறினார்.

“கிரிக்கெட் விளையாட்டுக்கு எந்தளவுக்கு இலங்கை பிரபலமானதோ, அந்தளவுக்கு சித்திரவதைக்கும் அந்நாடு பிரபல்யமானது. பல தசாப்தங்களாகத் திட்டமிட்டுத் தொடரும் சித்திரவதை, துஸ்பிரயோகங்களை முழுநாடும் ஏற்றுக்கொண்டு, பாதுகாப்புப் படைகளுக்கு ஆதரவளிப்பதை நிறுத்தவேண்டிய நேரம் இது. இது பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிகிடைக்க வேண்டிய நேரம் - என்று கூறப்பட்டுள்ளது. (அ)

# இடம்பெயர்ந்து 2009 இற்கு பின்னர் மீள்குடியேறியோர் விவரம் திரட்டல்

கொழும்பு, ஜூன் 27

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் உள்ளிட்ட காரணிகளால் இடம்பெயர்ந்து 2009 -ஆம் ஆண்டின் பின்னர் மீள்குடியேறியோர் குறித்த விவரங்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக திரட்டப்பட்டு வருகின்றன.

வட மாகாணத்தில் அனைத்து மாவட்டங்களிலும் இவ்வாறான தகவல் திரண்டும் பணிகள் அண்மைக் காலமாக இடம்பெற்று வருகின்றன.

அந்தத்தப் பகுதிகளுக்குப் பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், குடியிருப்பாளர்களை தொடர்பு கொண்டு இது குறித்த பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நாடு முழுவதும் இவ்வாறான தகவல்களைத் திரட்டும் பணிகள் இடம்பெற்று வருவதாகக் கூறப்படுகின்ற போதும், இதற்கான காரணம் குறித்து தெளிவுபடுத்தப்படாமையால் மக்கள் மத்தியில் குழப்பம் நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# சீசெல்ஸ் கடற்பரப்புக்குள் நுழைந்த 12 இலங்கை மீனவர்கள் கைதாகினர்

கொழும்பு, ஜூன் 26

சட்டவிரோதமாக சீசெல்ஸ் கடற்பரப்புக்குள் நுழைந்த 12 இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2 படகுகளின் ஊடாக இவ் வாறு குறித்த மீனவர்கள் மீன் பிடி நடவடிக்கையில் ஈடுபட் டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் மே மாதத்தின் பின்னர் இலங்கையை சேர்ந்த 5 படகுகள் அந்நாட்டு இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் கொரோனா தொற்றினால் பலி!



கொழும்பு, ஜூன் 27

கொரோனா வைரஸ் தொற்றால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ள பெருந்துயரச் சம்பவமொன்று பேராதனை, முருதலாவ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

72 வயதுடைய தந்தையும், 70 வயதுடைய தாயும், 38 வயதுடைய மகனுமே இவ்வாறு பலியாகியுள்ளனர்.

கொரோனா தொற்றிய இவர்களுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது. வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தநிலையிலேயே இவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இவர்களின் மரணம் தொடர்பில் விசாரணை ஆரம்பமாகியுள்ளது.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவம் பதிவாவதை தடுப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என சுகாதார தரப்பு தெரிவித்தது.



# பஸில் ராஜபக்ஷ எப்படி பிரச்னைகளை தீர்ப்பார்?

## கேள்வி எழுப்புகிறார் சோபித தேரர்

கொழும்பு, ஜுன் 27

**பஸில் நாடு திரும்பி, அமைச்சரானால் எல்லா பிரச்னையும் தீரும் என்ற கற்பனை பிம்பத்தை உருவாக்க முயலும் அரசியல்வாதிகள் குறித்து, ஓமல்பே சோபித தேரர் கேள்வியெழுப்பியுள்ளார். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல்வாதிகளுக்கு முன்னர் சில தனிநபர்களின் அடிபணியக்கூடிய நடவடிக்கைகள் நாட்டின் சீரழிவுக்கு வழிவகுத்தன என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.**

எம்பிலிப்பிட்டியில் ஊடகங்கள் மத்தியில் பேசும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பொதுஜன பெரமுன தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ இலங்கைக்கு திரும்புவதன் மூலம் பல எம்.பிக்கள் சலுகைகள் தொடர்பான வாக்குறுதிகளை அளித்து வருகின்றனர்.

எனினும், ஒரு தனிநபருக்கு தனது விருப்பங்களுக்கும், கற்பனைகளுக்கும் ஏற்ப செயல்படவும், சலுகைகளை வழங்கவும் அதிகாரம் இருந்தால் அமைச்சர்கள், அமைச்சரவையின் அவசியம் ஏன்?

அத்தகைய முடிவெடுக்கும் அதிகாரம் ஒரு தனிநபரிடம் இருந்தால் ஒரு நாட்டை நடத்துவதற்கு ஒரு ஜனாதிபதியும்ஆலோசகர் குழுவும் ஏன் அவசியம்?

ஒத்த எண்ணம் கொண்ட நபர்கள் ஜனநாயகத்தை அச்சுறுத்துவதால் நாடு மோசமடையும் - என்றார்.



# இரணைதீவு மக்களுக்கு மலேரியா பரிசோதனை!

கிளிநொச்சி, ஜுன் 27

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இரணைதீவு மக்களுக்கு நேற்று முன்தினம் மலேரியா பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை மலேரியா அற்ற நாடாக அறிவிக்கப்பட்டிருப்பினும் இரணைதீவு

இலங்கை இந்தியாவுக்கு இடைப்பட்ட கடலில் தனித்தீவாக இருப்பதனால் இந்தியாவில் தற்போதும் உள்ள மலேரியா சில வேளைகளில்

கடத்தப்பட்டிருக்கலாம் என்ற அடிப்படையில் இப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்தோடு அங்கு குடியேறி வசித்து வரும் மக்களுக்கு நுளம்பு வலைகளும் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மலேரியா தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரியும், மாவட்ட உளநல மருத்துவ அதிகாரியுமான மா. ஜெயராஜா தலைமையிலான மருத்துவக் குழுவினர் இரணைதீவுக்குச் சென்று அங்கு வசிக்கின்றவர் களின் இரத்த மாதிரிகளை பரிசோதனைக்காக பெற்றுள்ளனர்.

(அ)

# எக்ஸ்பிரஸ் கப்பலால் ஏற்பட்ட பாதிப்பை ஆராய்வதற்கு இந்திய குழு இலங்கைக்கு!

கொழும்பு, ஜுன் 27

இலங்கைக் கடற்பரப்பில் தீக்கிரையான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் சமுத்திர சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து ஆராய, இந்தியாவின் விசேட கப்பல் ஒன்று இலங்கையை வந்தடைந்துள்ளது.

நேற்று முன் தினம் இந்தக் கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் ஊடாக இலங்கைக் கடற்பரப்புக்கு ஏற்பட்ட பாதிப்பின் காரணமாக இடைக்கால இழப்பீடாக 720 மில்லியன் ரூபா கணக்கிடப்பட்டுள்ளது.

குறித்த தொகையை கப்பலின் காப்புறுதி நிறுவனம் வழங்குவதற்கு இணக்கம் வெளியிட்டுள்ளதாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.



# பாவனைக்குதவாத நிலையில் 200 கிலோ இறைச்சி சிக்கியது

வவுனியா, ஜுன் 27

வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் பாவனைக்குதவாத 200 கிலோ கோழி இறைச்சி பொது சுகாதாரப் பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டுள்ளது.

வட பகுதியில் விற்பனைக்காக கொண்டுவரப்பட்ட இந்த இறைச்சி ஏற்றிய வாகனத்தை சோதனைக்குட்படுத்திய வவுனியா தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குறித்த வாகனத்தில் போதியளவு குளிரூட்டி இன்மையால் இறைச்சி பழுதடைந்த நிலையில் காணப்பட்டதையடுத்து அவற்றை கைப்பற்றினர்.

இதேவேளை, வாகனத்தையும் கைப்பற்றிய அவர்கள் நீதிமன்றத்தில் குறித்த பொருட்களை ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## ஐரோப்பாவுக்கு அனுப்பப்படும்

# அஞ்சல் பொருள்களுக்கான வரிக்கொள்கையில் திருத்தம்

கொழும்பு, ஜுன் 27

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு அனுப்பப்படும், கடிதம் தவிர்ந்த ஏனைய அனைத்து அஞ்சல் பொருட்களுக்கான வரிக்கொள்கை எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் திருத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதாக அஞ்சல்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வரிக்கொள்கை திருத்தமானது, பெறுமதிசேர் வரி மற்றும் ஏனைய தீர்வை வரிக்கொள்கைகளுக்கு உட்பட்டதாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# சனநெரிசலான இடங்களுக்கு செல்வதை தவிர்க்கவேண்டும்

## இராணுவ தளபதி கோரிக்கை

கொழும்பு, ஜுன் 27

வார இறுதி நாட்களில் கடைகள் உட்பட சனநெரிசலான இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு இராணுவத் தளபதி சவேந்திர சில்வா பொதுமக்களிடம் கேட்டுள்ளார்.

கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டாலும் மாகாணங்களுக்கு இடையேயான பயணக் கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என்றும் அவர் கூறினார்.

எனவே நாட்டில் கொரோனா தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்த பொதுமக்களின் ஆதரவு மிகவும் அவசியமானது என்றும் இராணுவத் தளபதி குறிப்பிட்டார்.

# இதுவரை 2,570,022 பேருக்கு தடுப்பூசி

கொழும்பு, ஜுன் 27

நாட்டில் இதுவரை 2,570,022 பேருக்கு கொவிட் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனை குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய, நேற்று முன் தினம் மாத்திரம் 28,027 பேருக்கு சீனாவின் சினோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

மேலும், சினோபார்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் நேற்று முன் தினம் 3,983 பேருக்கு போடப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இதுவரை 372,719 பேருக்கு கொவிசீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டுள்ள சீன பிரஜைகள் 2,865 பேருக்கு சினோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதுடன் 2,435 பேருக்கு இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# மெசினா கொள்கலன் கப்பலில் ஏற்பட்ட தீ கட்டுப்பாட்டுக்குள்!

கொழும்பு, ஜுன் 27

கொழும்பிலிருந்து சிங்கப்பூர் செல்லும் வழியில் எம்.எஸ்.சி மெசினா கொள்கலன் கப்பலின் இயந்திர அறையில் ஏற்பட்ட தீ விபத்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த தீப்பரவலால் நாட்டின் கடல் பிராந்தியத்திற்கு பாதிப்பு ஏற்படாது என சமுத்திர சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்துள்ளது.

தென் கடற்பரப்பின் மகா இராவணா வெளிச்ச வீட்டிலிருந்து கிழக்கே 480 கடல் மைல் தூரத்தில் பயணித்துக் கொண்டிருந்தபோது குறித்த கப்பலில் தீ பரவியது.

28 பணியாளர்களுடன் சென்ற கப்பலில் ஒருவர் காணாமற்போயுள்ளதாக இந்திய கரையோர பாதுகாப்புப் பிரிவினர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் தொடரும் கொரோனா பலியெடுப்பு!

## 13 நாட்களில் 726 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 27

**இலங்கையில் கொரோனா தொற்று காரணமாக ஏற்படும் மரணங்கள் தொடர்ச்சியாக அதிகரித்து வரும் நிலையில் கடந்த 13 நாடக்ளில் மட்டும் 726 பேர் உயிரிழந்துள்ளனர்.**

சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தனவின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டு வரும் நாளாந்த கோவிட்-19 மரணங்கள் தொடர்பான தகவல்களின் அடிப்படையில் இவ்வாறு 726 பேர் கடந்த 13 நாட்களில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்துள்ளனர்.

கடந்த 12ஆம் திகதி முதல் உடனுக்குடன் கோவிட்-19 மரணங்கள் தொடர்பான எண்ணிக்கை வெளியிடப்பட்டு வருகிறது.

அந்தவகையில் கடந்த ஜூன் - 12 ஆம் திகதி முதல் ஜூன் - 24 வரையான 13 நாட்களில் வெளியிடப்பட்ட கோவிட் - 19 மரணங்களின் எண்ணிக்கை 726 ஆக உள்ளது.

குறித்த 13 நாட்களில் ஜூன்-20 ஆம் திகதி 71 பேர் உயிரிழந்திருந்ததாக ஜூன்-21 அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் அதிகளவானா கோவிட்-19 மரணங்கள் பதிவாகிய நாளாக ஜூன்-20 ஆம் திகதி அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜூன் - 12 ஆம் திகதி - 67 பேர், ஜூன் - 13 ஆம் திகதி - 57 பேர், ஜூன் - 14 ஆம் திகதி - 55 பேர், ஜூன் - 15 ஆம் திகதி - 59 பேர், ஜூன் - 16 ஆம் திகதி - 51 பேர், ஜூன் - 17 ஆம் திகதி - 55 பேர், ஜூன் - 18 ஆம் திகதி - 54 பேர், ஜூன் - 19 ஆம் திகதி - 47 பேர், ஜூன் - 20 ஆம் திகதி - 52 பேர், ஜூன் - 21 ஆம் திகதி - 71 பேர், ஜூன் - 22 ஆம் திகதி - 65 பேர், ஜூன் - 23 ஆம் திகதி - 45 பேர், ஜூன் - 24 ஆம் திகதி - 48 பேர்.

இவ்வாறு கடந்த 13 நாட்களில் 726 கோவிட்-19 மரணங்கள் நிகழ்ந்துள்ளதன் மூலம் இது வரை இலங்கையில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தவர்களை மொத்த எண்ணிக்கை 2,862 ஆக உயர்ந்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 323 பேர் கைது

கொழும்பு, ஜூன் 27

கடந்த 24 மணிநேரத்தில், தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய323 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பதில் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை, இதுவரை தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 42,670 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# யாழில் 91 பேர் உட்பட வடக்கில் மேலும் 160 பேருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணத்தில் 91 பேர் உட்பட வட மாகாணத்தில் நேற்று 160 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதாக கொவிட் 19 பரவலை தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையத்தினால் நேற்று காலை வெளியிடப்பட்ட நாளாந்த நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் -91, கிளிநொச்சியில் -08, முல்லைத்தீவில் -06, வவுனியாவில் 28 மற்றும் மன்னாரில் 27 பேருக்கு நேற்று முன் தினம் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இவற்றுடன் யாழ்ப்பாணத்தில் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5,553 ஆக அதிகரித்துள்ளது.

கிளிநொச்சியில் -1,408, முல்லைத்தீவில் - 1,254, வவுனியாவில் - 1,383, மன்னாரில் - 912 பேரும் இதுவரை தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்பட்டுள்ளமை கோவிட் 19பரவலை தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையத்தின் அறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# கிழக்கில் மேலும் 126 பேருக்கு தொற்று உறுதி!

மட்டக்களப்பு, ஜூன் 27

மட்டக்களப்பில் 64 பேர் உட்பட கிழக்கில் நேற்று முன் தினம்126 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக கொவிட் 19பரவலை தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பில் -46, அம்பாறையில் 43 மற்றும் திருகோணமலையில் 19 பேருக்கு நேற்று முன் தினம் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தேசிய செயல்பாட்டு மையத்தினால் நேற்று காலை வெளியிடப்பட்ட நாளாந்த நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய தொற்று நோயாளர்களுடன் மட்டக்களப்பில் -3,777, அம்பாறையில் 4,249 மற்றும் திருகோணமலையில் - 3,045 பேர் இதுவரை தொற்றுக்குள்ளாகி உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

# கொவிட்-19 வைரஸ் திரிபு பாதிப்புடன் இரண்டு வௌவால்கள் இலங்கையில்!

கொழும்பு, ஜூன் 27

கொவிட்-19 வைரஸின் முதன்மை மாறுபடுகளில் இரண்டு திரிபு வைரஸ் பாதிப்புடன் இலங்கையில் வௌவால்கள் கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

மனிதர்களுக்கு பரவும் அல்பா மற்றும் பீட்டா ஆகிய கொவிட்19 மாறுபாடுகள் கொண்ட இரண்டு வகை விசேட வௌவால்கள் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் ஜேர்மனியின் ரொபர்ட் கோக் நிறுவனம் இணைந்து நடத்திய ஆய்வில் இந்த விடயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



இந்த கண்டுபிடிப்பு தொடர்பிலான ஆய்வறிக்கையை சர்வதேச வக்சின் சஞ்சிகையில் வெளியிட ஆராய்ச்சி குழு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

2017ஆம் ஆண்டு Identific - ation of Emerging Eqents என்ற தலைப்பின் கீழ் இந்த பரிசோதனை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள வௌவால்கள் மூலம் மனிதர்களுக்கு பரவக் கூடிய வைரஸ் தொடர்பில் இலங்கையில் பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டது.

கொஸ்லந்தை பிரதேசத்தில் அமைந்துள்ள வௌவால் குகையை அடிப்படையாக கொண்டு இந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாக ஆய்வுக்குழு உறுப்பினரான கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் ஜேர்மனியின் ரொபர்ட் கோக் நிறுவனத்தின் பேராசிரியரான தேஜானி பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த ஆய்வு நடவடிக்கைக்காக 395 வௌவால்களின் மாதிரிகள் சேர்க்கப்பட்டுள்ளன. விலங்குகளின் மாதிரிகள் மற்றும் மலக்குடலிலிருந்து எடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 33 வைரஸ் மாதிரிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட எல்பா மற்றும் பீட்டா கொவிட்19 வைரஸ் மாறுபாடு தற்போது பல நாடுகளில் பரவும் பிரிட்டன் அல்பா அல்லது தென்னாபிரிக்காவின் பீட்டாவின் துணை வகைகள் அல்ல. ஆனால் இவை கொவிட்19 வைரஸின் நான்கு முதன்மை மாறுபாடுகளில் இரண்டாகும்.

எனினும் இந்த மாறுபாடுகள் மனிதர்களின் உடலில் பரவி கொவிட் 19 வைரஸ் வரை கொண்டு செல்லுமா? என்பது இதுவரையில் உறுதி செய்யப்படவில்லை. ஆனாலும் மக்கள் வௌவால்களுக்கு ஆபத்துக்களை ஏற்படுத்த வேண்டாமென அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# அசேல சம்பத் கைது!

கொழும்பு, ஜூன் 27

நுகர்வோர் உரிமைகள் செயற்பாட்டாளர் அசேல சம்பத், பிலியந்தல பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் ஒரு வாகனத்தில் சி.ஐ.டி என கூறி, அடையாளம் தெரியாத 20 பேரால் அழைத்துச் செல்லப் பட்டதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

யூரியூப் மற்றும் ஏனைய சமூக வலைத்தளங்கள் ஊடாக போலியான செய்தி ஒன்றை பதிவிட்டமை தொடர்பில் விசாரணைகளுக்காக அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய அவரிடம் விசாரணைகள் செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அஸ்ட்ராசெனேகா தடுப் பூசியை இலங்கைக்கு எடுத்து வந்து அதில் சில தரமற்ற திரவங்களை கலந்த பின்னர் மக்களுக்கு செலுத்துவதாக அவர் சமூக வலைத்தளங்கள் ஊடாக பொய்யான செய்தி ஒன்றைப் பரப்பியதாக அவருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# கொவிட்-19 தொற்றாளரை மறைக்கும் நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை!

கொழும்பு, ஜூன் 27

கொவிட்-19 தொற்று அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களது தகவல்களை மறைக்கும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்கள் தொடர்பில் சில அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் சுகாதாரப் பிரிவுக்கு அறிவிக்காமல் மறைத்து வைத்துள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளதென சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இனிமேல், அவ்வாறு தொற்றாளர்களை மறைத்து வைத்திருக்கும் எந்தவொரு நிறுவனமாக இருந்தாலும் அவற்றுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ள சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண, நாடு முழுவதுமுள்ள சுகாதாரப் பரிசோதகர் இது தொடர்பில் அவதானமான இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

பயணக் கட்டுப்பாடு நீக்கப்பட்டபோதிலும் எழுமாறான பி.சி.ஆர் பரிசோதனைகள் ஊடாக அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதை கவனத்திற் கொள்ளுமாறும் அடையாளம் காணப்படாத பல தொற்றாளர்கள் வெளியில் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம்**




# புலம்பெயர் அமைப்புகள் இலக்கு வைக்கப்படுகின்றனவா?

**2009**களுக்கு பின்பான இலங்கைத் தமிழர் அரசியலில் பிரிக்க முடியாத ஓரங்கமாக புலம்பெயர்ந்த தமிழர் மாறியுள்ளனர். 2009களுக்கு முன்பும் அவர்களின் பங்களிப்பு பொருளாதார இராஜதந்திர ரீதியில் முக்கியம் பெற்றதாக அமைந்த போதும் முள்ளிவாய்க்கால் போருக்கு பின்பே அதிகம் தனித்துவமாக அமைந்திருந்தது.

தற்போதைய அரசியலில் புலத்தை நகர்த்துவதுடன் புலம்பெயர்ந்த தளத்திலும் இராஜதந்திர மற்றும் அரசியல் நகர்வுகளை மேற்கொள்பவர்களாக விளங்குகின்றனர். ஆனால், அவ்வகை அமைப்புகளிலும் இலங்கை - இந்திய மற்றும் ஐரோப்பிய அரசுகளின் நலன்களுக்காக இயங்கும் அமைப்புக்களும் தமது பிடிக்குள் இலங்கை தமிழர் அரசியலை இயக்க வேண்டும் (Remote Control Politics) எனும் அவாவுடன் இயங்கும் சக்திகளும் இல்லாமலில்லை. இக்கட்டுரையும் புலம்பெயர் தமிழர்களை நோக்கிய தோற்கடிப்புவாதம் ஆரம்பித்துள்ளது என்பதை அடையாளம் காட்ட முயலுகிறது.

முதலில் கடந்த 15 ஆம் திகதி (யூன் 2021) இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் செய்திக் கட்டுரை ஒன்று வெளியாகியிருந்தது. அக்கட்டுரையின் சாரம்சமாக நாடுகடந்த அரசாங்கம் பற்றியும் அதன் தோற்றம் கொள்கை மற்றும் அதன் தற் போதைய போக்குப் பற்றியும் தெளிவான கட்டுரையொன்று கட்டமைக்கப்பட்டிருந்தது. அதில் அத்தகைய நாடுகடந்த அரசாங்கத்தின் கொள்கைக்கு மாறாக கனடாவைச் சேர்ந்த குழுவொன்று இலங்கை தேசியத்தை ஏற்றுக் கொண்டு கூட்டு ஆட்சிமுறைக்குள் செயல்பட உடன்பட்டிருப்பதாக அக்கட்டுரை குறிப்பிட்டுள்ளது.

அது மட்டுமன்றி அத்தகைய அரசாங்கத்திற்குள் பலபிரிவுகள் உள்ளவென்றும் வெவ்வேறு சித்தாந்தங்கள் காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளது. அத்தகைய பிரிவுகள் சுயாட்சி அலகொன்றை ஏற்றுக் கொள்கின்றன எனவும் அச்செய்திக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அளவில் வெளியாகியுள்ள திரைப்படங்களும் அவை சொல்லும் செய்திகளும் இலங்கைத் தமிழர்களை பாதிப்பதுடன் புலம்பெயர்ந்த தளத்தில் இயங்கும் அமைப்புகள் மீதும் தாக்குதல்களை தொடுக்கின்றன. இந்தியன் எக்ஸ்பிரஸ் நாடுகடந்த அரசாங்கத்தின் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ள விதம் அவ்வமைப்பினை சிதைப்பதற்கான உபாயமாகவே தெரிகிறது.

இதே போன்றே 13.06.2021 அன்று பிரித்தானியாவில் இரகசியமான ஒரு சந்திப்பு நிகழ்ந்ததாக தெரியவந்துள்ளது. இது தொடர்பில் கூர்மை இணையத்தளம் விரிவான கட்டுரையை தந்துள்ளது. இலங்கையின் ஆளும் தரப்பின் சகோரர்களில் ஒருவருடனான உரையாடல் ஒன்றை அமெரிக்கா பிரித்தானியா மற்றும் இந்திய தரப்புக்கள் புலம்பெயர் அமைப்புக்களையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினையும் மையப்படுத்தி அந்த சந்திப்பை மேற்கொண்டதாக தெரியவருகிறது. இதன் ஊடாக ஓர் உடன்பாட்டை எட்டத் திட்டமிட்டதாகவும் அவ்விணையத் தளம் வெளிப்படுத்தியுள்ளது. இதே காலத்திலேயே தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இலங்கையின் ஜனாதிபதி பேச அழைத்திருந்தமையும் பின்பு அது கைவிடப்பட்டதும் நிகழ்ந்துள்ளது. இதற்கான ஆதாரத்தை கூர்மை கணணியின் பதிவுகளைக் கொண்டு உறுதிப்படுத்துகின்றது.

இதனோடு இணைத்ந்த விதத்தில் நோர்வே தரப்புடனும் ஏனைய வெளியுறவு மட்டத்திலும் மீண்டும் ஒரு நல்லிணக்க செய்முறையை ஆரம்பிக்க இருப்பதாக ஐரோப்பிய புலம்பெயர் அமைப்புக்களுக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது. ஏன் தற்போது மீண்டும் ஒரு நல்லிணக்கம் தேவைப்படுகிறது.

முதலாவது இலங்கைத் தமிழரது அரசியல் புலத்தில் உள்ள அரசியல் சக்திகள் எவரிடமும் கிடையாது என்பதில் இலங்கை ஆட்சியாளர்கள் தெளிவாக உள்ளனர். புலத்திலுள்ள அரசியல் சக்திகளை இலகுவில் கையாளவும் கட்டுப்படுத்தவும் முடியும் என்பதுடன் தேர்தல் குழுக்களாகவே அவர்கள் செயல்படுவார்களே அன்றி வேறு எந்தவிதத்திலும் தமக்கு ஆபத்தானவர்களாக அவர்கள் இல்லை என்பதில் நன்கு தெளிவாக உள்ளனர். பேச்சில் மட்டுமே வல்லவர்களே அன்றி செயலில் பூச்சியமானவர்கள் என்பதில் மாற்றுக் கருத்து அவர்களுக்கில்லை.

இரண்டாவது இந்தியா இலங்கைத் தமிழர்களை ஒப்பீட்டடிப்படையில் ஆதரிக்காது என்பதில் இலங்கை ஆட்சியாளர்களுக்கு நன்கு தெரியும். தென் இலங்கை ஆட்சியா தமிழர்களா என்ற நிலையில் ஆட்சியே தமக்கு வேண்டும் என்ற முடிவை எடுப்பார்கள் என்பதில் தென்னிலங்கைக்கு தெளிவுள்ளது. அது மட்டுமன்றி இந்தியா தற்போது ஒரு புவிசார் சக்தியே இல்லை என்ற நிலைப்பாட்டை இலங்கை எடுத்துள்ளது. தென்னாசியா முழுமையாக சீனாவின் புவிசார் நலன்களுக்குள் அகப்பட்டுளளது. 1962 முதல் அருணாசலப் பிரதேசத்தில் இலங்கைப் பரப்பளவுள்ள பிரதேசத்தை சீனாவிடமிருந்து மீட்க முடியாத இந்தியா இலங்கையிலும் தென்னாசியாவிலும் இருந்து சீனாவை எப்படி மிரட்டப் போகிறது என்பதில் இலங்கைப் புலமையாளர்களுக்கு தெளிவுள்ளது. தற்போது சீனாவே தென்னாசியாவின் புவிசார் சக்தி என்பதை தென்னிலங்கை நன்கு உணர்ந்துள்ளது. இலங்கைத் தமிழரைப் பாதுகாத்துக் கொண்டு தனது நலனையும் இந்தியா அடைய முயலாது என்பதில் தென்னிலங்கைக்கு மாற்றுக் கருத்துக்கிடையாது. தனது நலனுக்காக ஏதாவது செய்யுமே அன்றி இலங்கைத் தமிழருக்காக எதனையும் மேற்கொள்ள முயலாது.

> “
>
> **தற்போதைய இலங்கை ஆட்சியாளரின் பிரதான இலக்கு புலம்பெயர் அமைப்புக்களே. அவற்றை வளைத்துப் போட்டுவிட்டால் இலகுவில் மேற்குலக அரசியலை கையாண்டுவிடலாம். அதற்கான முனைப்புகளையே ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் அரங்கேறிவருகிறது. புலத்திலும் புலம்பெயர் தளத்திலும் தமிழர் அமைப்புக்கள் உதிரிகளாக இருப்பதால் ஆபத்தெனக் கருதிய நிலை கடந்து தற்போதைய சூழலில் பாதுகாப்பானதென கருதும் நிலை ஏற்பட்டுவிட்டது.**

அதனையும் தனது பல்தேசியக் கம்பனிகளின் நலனுக்கானதாகவே அமையுமே அன்றி இந்திய தேசியத்திற்கானதாக அமையுமா என்பதும் சந்தேகமானதே.

மூன்றாவது ஜெனிஜவா ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கத் தீர்மான முயற்சிகளுக்கு பின்னால் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் பலமாக இருப்பதாக இலங்கை ஆட்சியாளர்கள் கருதுகின்றனர். இத்தகைய மேற்கு-புலம்பெயர் அமைப்புக்களின் கூட்டு நகர்வு ஏதோ ஒரு அடிப்படையில் இலங்கையின் இருப்புக்கு தொடர் ஆபத்தாக அமைவதுடன் நிரந்தரமான ஆட்சியதிகாரத்தை குடும்பம் தக்கவைக்க முடியாத நிலையொன்று நிலவுகிறது. நீட்சியான ஆட்சியை கட்டமைக்க விரும்பும் தற்போதைய ஆட்சியாளர்கள் அதற்கான அடித்தளத்தை தகர்ப்பதில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் பிரதான காரணம் எனக்கருதுகின்றன. அதனால் அவற்றை நல்லிணக்க மேசைக்கு அழைத்து சிதைத்துவிட முனைகிறது. ஆரம்பத்தில் பல புலம்பெயர் அமைப்புக்களை தடைசெய்ததுடன் அவற்றுடன் தொடர்புடைய தனிநபர்களும் நெருக்கடிக்கு உள்ளாக்கியிருந்தது. தற்போது நேரடியாக நல்லிணக்கத்திற்கு அழைத்து அவற்றை உடைத்துவிட விரும்புகிறது.

நான்காவது புவிசார் அரசியல் ரீதியில் சீனாவின் நட்பு இலங்கைக்கு அவசியமானது என்பதில் தெளிவாக உள்ள இலங்கைத் தீவின் புலமையாளரும் அரசியல் தலைமையும் ஆட்சியாளரும் மேற்கை எதிர்கொள்ள பல முனைப்புகளை மேற்கொள்கின்றனர். உள்நாட்டில் மேற்கு எதிர்ப்பு வாதமே ஆட்சியதிகாரத்தை பாதுகாக்கும் எனக்கருதும் தற்போதைய ஆட்சியாளர்கள் சர்வதேச மட்டத்தில் மேற்குடன் கைகோக்க முடியுமெனக்கருதுகின்றனர். தென் இலங்கை ஆட்சியாளர்கள் இந்தோ - பசுபிக் உபாயத்தை இலங்கைக்கு வெளியே ஏற்றுக் கொள்ளவும் இலங்கைக்குள் எதிர்க்கவும் விரும்புகின்ற இரட்டை அணுகுமுறையை கொண்டுள்ளனர். இந்தியாவை கையாளவும் பொருளாதார நெருக்கடியை தீர்க்கவும் சீனாவை முன்னிறுத்திக் கொண்டு ஜெனிவாவையும் மேற்கையும் புலம்பெயர் அமைப்புக்களையும் கையாள இலங்கை ஆட்சியளர்கள் முனைகின்றனர். மேற்கும் இந்தியாவும் இலங்கைக்கு நெருக்கடி கொடுத்தால் சீனாவுடன் இலங்கை முழுமையாக ஒன்றிணைந்துவிடும் என்ற அரசியலை மேற்கொண்ட நிலை மாறிவிட்டதனால் களத்தில் இறங்கி மேற்கை கையாள வேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். மேற்கு தனது நலனை இலங்கைக்குள்ளும் இலங்கை மேற்கின் நலனை இலங்கைக்கு வெளியேயும் நடைமுறைப்படுத்த முயலும் ஓர் இழுபறி நிலவுகிறது.

எனவே, தற்போதைய இலங்கை ஆட்சியாளரின் பிரதான இலக்கு புலம்பெயர் அமைப்புக்களே. அவற்றை வளைத்துப் போட்டுவிட்டால் இலகுவில் மேற்குலக அரசியலை கையாண்டுவிடலாம். அதற்கான முனைப்புகளையே ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் அரங்கேறிவருகிறது. புலத்திலும் புலம்பெயர் தளத்திலும் தமிழர் அமைப்புக்கள் உதிரிகளாக இருப்பதால் ஆபத்தெனக் கருதிய நிலை கடந்து தற்போதைய சூழலில் பாதுகாப்பானதென கருதும் நிலை ஏற்பட்டுவிட்டது. இது இந்தியாவுக்கும் மேற்குக்கும் நெருக்கடியானதாகவே உள்ளது. இதில் மேற்கைவிட இந்தியாவே அதிகம் முக்கியத்துவம் கொடுப்பதாக தெரிகிறது.

தமிழகத்தில் ஓர் அரசியல் கட்சி தமிழக அரசியலை விட்டு இலங்கைத் தமிழர் அரசியலை நிகழ்ச்சி நிரலாகக் கொண்டு இயங்குகிறது. அது தமிழக ஆட்சியையும் இந்திய அளவிலான ஆட்சியையும் இலங்கைத் தமிழரை முன்னிறுத்தியே தாக்குதல் நிகழ்த்துகிறது. ஏறக்குறைய அத்தகைய தமிழக கட்சி கூறுவதுதான் இலங்கைத் தமிழரின் கடந்தகால அரசியல், சமூகம், பண்பாடு என்றாகும் நிலை வளர்ந்து கொண்டு செல்வதுடன் புலம்பெயர் தமிழர்களின் நிதியிலும் அங்கத்துவத்திலும் தமிழருக்கான ஆட்சியை வழங்கப் போவதாக திரிபுவாதங்களை மேற்கொள்கிறது. இத்தகைய செய்முறை இலங்கைத் தமிழர்களை தமிழகத்தின் எதிரிகளாக மாற்ற வழியமைக்கும். கட்சிகளைக் கடந்த உறவொன்று தமிழகத்திற்கும் இலங்கைத் தமிழருக்கும் வேண்டும். **நன்றி - அருவி**

# சோவியத் யூனியனையே சிதறடித்த செர்னோபில் பேரழிவு



றினோஸா

மனித இனத்தின் முதலும் முடிவுமான எதிரி மனிதனே!

இல்லாத யுத்தம் உருவாகும் என்றும், நடக்காத சண்டை நடந்து விடும் என்றும் கணக்குப் போட்டு, ஒவ்வொரு நாடும் வன்மத்தையும் குரோதத்தையும் எரியூட்டி வளர்த்து, அணையாமல் பார்த்துக் கொண்டிருக்கின்றன. எப்போதும் எதிரி தன்னை தாக்கலாம் என்று, பலம் பொருந்திய ஆயுதங்களை உருவாக்கி பதுக்கி வைத்திருக்கின்றன. தன் வினை தன்னைச் சுடும் என்பது போல, 35 வருடங்களுக்கு முன்பாக உலகின் பலம் பொருந்திய வல்லரசு தன் கையால் தன் கண்ணையே குத்திக் கொண்ட பரிதாபம் செர்னோபில்.

தான் உருவாக்கிய அணு ஆயுதம் தன் மக்களையே பதம் பார்த்த வரலாற்றின் மோசமான உதாரணம் சோவியத் யூனியனின் சுவர்களில் படிந்து கிடக்கிறது. ஏப்ரல் 26, 1986 - வரலாற்றில் மிக மோசமான அணு விபத்து பதியப்பட்ட நாள். வடக்கு உக்ரைனில் முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் செர்னோபில் (Chernobyl) நகருக்கு அருகில் கட்டப்பட்ட அணுமின் நிலையத்தில் ஒரு அணு உலை வெடித்து எரிந்தது. இரகசியங்களால் மூடப்பட்டு மறைக்கப்பட்ட இந்த சம்பவம் மனித வரலாற்றிலேயே அழிக்க முடியாத தழும்பாக மாறிப்போன ஒரு நிகழ்வானது. வல்லரசின் வளர்ச்சியின் அடையாளமாக தம்பட்டம் அடிக்கப்பட்ட அணு உலை, அதே வல்லரசின் வீழ்ச்சிக்கும் வித்திட்டது.

நிகழ்ந்து 35 ஆண்டுகளுக்கும் மேல் ஆகிவிட்டாலும் இந்த ஆலையைச் சுற்றியுள்ள நிலப்பரப்பு இன்னும், குறைந்தது 20,000 ஆண்டுகள் வரை மனித உயிர் வாழக்கூடியதாக இருக்காது என்று விஞ்ஞானிகள் மதிப்பிடுகின்றனர். இதுவரை வரலாற்றிலே பதியப்பட்ட மிகப்பெரிய அணு விபத்தான செர்னோபில் நிகழ்ந்தது எப்படி?

இரண்டாம் உலகப் போருக்கு பின்னர் சோவியத் யூனியன் தனது அதீத வளர்ச்சியின் அடுத்த கட்டமாக அதிகளவில் அனுசக்தியில் முதலீடு செய்தது. முதலாளித்துவ அமெரிக்காவுக்கும், சோசலிஷ சோவியத் யூனியனுக்கும் இடையே நடந்த பனிப்போரில் யார் பெரியவர் என்பதை நிரூபிக்க ஒன்றுக்கொன்று தம் பலத்தை கூட்டிக் கொண்டே போயின.

விவசாயம், தொழில்நுட்பம், தொடங்கி விண்வெளி ஆராய்ச்சி வரை ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக் கொண்டது. இதில் ஏற்கெனவே அமெரிக்கா அமைத்து வைத்திருந்த அணு உலைகளை முறியடிக்கும் விதமாக சோவியத் யூனியன் தனது அணு ஆராய்ச்சிக்கென ஒரு நகரத்தையே வடிவமைத்தது. பிறிபயட் ( Pripyat) என அழைக்கப்பட்ட அந்த அழகிய நகரம் அனைத்து வசதிகளும் பொருந்திய ஒரு சொர்க்க பூமியாக உருவாக்கப்பட்டு, சோவியத் அரசின் அணு ஆராய்ச்சி திட்டத்தில் பணி புரியும் ஊழியர்கள் வாழும் இடமாக மாற்றப்பட்டது.

சோவியத் விஞ்ஞானிகள் 1977ஆம் ஆண்டு முதல் நான்கு RBMK அணு உலைகளை தற்போதைய உக்ரேனின் பெலாரஸடனான எல்லைக்கு தெற்கே அமைந்துள்ள மின் நிலையத்தில் நிறுவினர். ஏப்ரல் 25, 1986 அன்று, வி.ஐ. லெனின் அணுமின் நிலையத்தின் நான்காவது உலையில் (V.I. Lenin Nuclear Power Station's fourth reactor) வழக்கமான பராமரிப்பு நிகழ்வானது தொழிலாளர்களின் ஓய்வு நேரத்தில் திட்டமிடப்பட்டது.

சோதனையின்போது, தொழிலாளர்கள் பாதுகாப்பு நெறிமுறைகளை மீறியதாலும், சரியாக திட்டமிடப்படாத ஆராய்ச்சி யாலும் 4ஆம் ஆலைக்குள் உள்ள கலன்கள் அதீத வெப்பத்தை கக்க ஆரம்பித்தது. நொடி நேரத்தில் மின்சாரம் அதிகரித்து தீப்பற்றியது. உலகின் தலை சிறந்த அணு சக்தி விஞ்ஞானிகளையும் வல்லுநர்களையும் கொண்ட சோவியத் யூனியனாலேயே என்ன செய்வது என்று முடிவெடுக்க முடியாமல் திணறியவேளை, அந்த அதிசக்தி வாய்ந்த அணு உலை வெடித்துச் சிதறியது.

உடனே அந்த உலையை முழுவதுமாக மூட முயற்சித்த போதிலும், வெடிப்பின் எதிர்வினையாக மற்றொரு ஆலை என சங்கிலித் தொடராக தீப்பற்றி இறுதியில் மொத்த அணுசக்தி மையமுமே வெடித்து கதிரியக்க பொருட்களை வளிமண்டலத்தில் கக்கியது. வெடிப்புக்கு முன்னதாக கிட்டத்தட்ட 190 மெட்ரிக் தொன் அணு எரிபொருள் அங்கு சேமிக்கப்பட்டு இருந்தது. வெடிப்பின்போது யுரேனியம், புளூட்டோனியம், ஐயோடைன் 131, சீசியம் 137 மற்றும் பல ஆபத்தான கூறுகள் பல மைல் தொலைவுக்கு பரவியது. 20 தொன் அளவிலான கதிர்வீச்சு நிறைந்த அணுக்கழிவு, 30 தொன் அளவிலான கதிர்வீச்சு நிரம்பிய துகள்கள், அந்தப் பகுதி முழுதும் சிதறடிக்கப்பட்டன.

ஜப்பானின் ஹிரோஷிமாவில் வீசப்பட்ட அணுகுண்டின் கதிரியக்கத்தை போல 400 மடங்கு கதிரியக்கத்தை அந்த விபத்து வெளியிட்டது. சுமார் 20 வகையான கதிர்வீச்சுப் பொருட்கள் காற்று மண்டலத்தில் கலந்தன. செர்னோபிலின் 190 மெட்ரிக் தொன்யுரேனியத்தில் 30 சதவிகிதம் வரை இப்போதும் வளிமண்டலத்தில் கலந்து இருக்கிறது. அந்த இடத்தில் இருந்த மரம், செடி, புல், பூண்டு, விலங்குகள், பறவைகள் என மொத்த சுற்றுச் சூழல் அமைப்பும் கருகி சாம்பலானது.

அந்த விபத்தின்போது நூறுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். 30 பேர் நேரடி பாதிப்புக்கு உள்ளாகி அதன் பின் வந்த நாட்களில் கடும் கதிர்வீச்சு நோய்க்கு ஆளாகி அனைவரும் இறந்து போனார்கள். இறுதியாக சோவியத் யூனியன் 3 இலட்சத்து 35 ஆயிரம் மக்களை அங்கிருந்து வெளியேற்றி, அணு உலையைச் சுற்றிய 35 கி.மீற்றர் அகலமான எல்லையை தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவித்தது.

அணு கதிர்வீச்சின் விளைவுகள் குறித்த ஐக்கிய நாடுகளின் விஞ்ஞானக் குழுவின் அறிக்கையின்படி இந்த சம்பவத்தின் விளைவாக 6,000இற்கும் மேற்பட்ட குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினர் தைரொய்ட் புற்றுநோயால் பாதிக்கப்பட்டனர் என்றும் பல ஆயிரம் பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இறந்தனர் என்றும் கூறுகிறது. ஆயினும், வெடி விபத்து நடந்த போதே அணு ஆலைக்கு அருகில் வசிப்பவர்கள் என்ன நடந்தது என்பதை வெளி உலகிற்குச் சொல்வதைத் தடுக்க தொலைபேசி இணைப்புகள் உடனடியாக வெட்டப்பட்டன. ஒட்டுமொத்த உண்மையையும் மூடி மறைக்க முயன்றது சோவியத் யூனியன். எனவே, சரியான பாதிப்பின் நிலவரம் இன்று வரை தெரியாத ஒரு மர்மமே!

கதிர்வீச்சின் வீரியத்தை உணர்ந்த சோவியத் அரசு அதன் பரவலை தடுக்க அதன் மீது ஒரு கொங்கிறீட் வேலியை அமைக்க திட்டமிட்டது. 220 தொன் கதிரியக்க பொருட்கள் சிதறிக் கிடந்த இடத்தை சுற்றி சர்கோபகஸ் (sarcophagus) என்று அழைக்கப்பட்ட கொங்கிறீட் வேலியை கட்ட சுமார் 6 இலட்சம் தொழிலாளர்களை ஈடுபடுத்தியது. டிசம்பர் 1986இல் மனித சமூகத்தையே அழிக்கக் கூடிய வலிமை பொருந்திய அணு அரக்கனை சர்கோபகஸ் எனும் கொங்கிறீட் கொண்டு மூடியது சோவியத் அரசு.

செர்னோபில் பேரழிவு சோவியத் யூனியனின் வீழ்ச்சியில் ஒரு முக்கிய பங்கு வகித்தது. பொருளாதாரம் மற்றும் அரசியல் ரீதியில் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்கு இந்த நிகழ்வு மேலும் வலு சேர்த்தது.

செர்னோபில் பேரழிவுக்கு முன்பு வரை மிகவும் ஒற்றுமையாக, நிலையானதாக இருந்த சோவியத் மக்கள் இந்த பேரழிவுக்குப் பின் அமைப்புக்கு எதிரான தம் அதிருப்தியை வெளிப்படுத்தத் தொடங்கினர். அதுவரை சோவியத் அமைப்பின் மீது நம்பிக்கை வைத்து, அதன் குறைகளை மன்னித்து, அதன் எல்லைக்குள் தமக்கு ஒரு சிறந்த எதிர்காலத்தை எதிர்பார்த்த மக்கள், செர்னோபிலுக்குப் பிறகு, இந்த அமைப்பு நம்பமுடியாதது என்றும் தமக்கும், தம் வாரிசுகளுக்கும் ஆபத்தானது என்றும் தீவிரமாக நம்பத் தொடங்கினார்.

செர்னோபிலுக்குப் பிறகு, ஒவ்வொரு குடிமகனின் பாதுகாப்பும் ஆபத்தில் உள்ளது என்ற அச்சம் சோவியத் யூனியனின் பிளவுக்கு தூண்டில் போட்டது. உலகளாவிய அணுசக்தி எதிர்ப்பு இயக்கத்திற்கு தூண்டுதலாக இருந்த இந்த பேரழிவினால் 23 ஆயிரத்து 500 கோடி டொலர் சேதம் ஏற்பட்டு இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. பெலாரஸ் நிலப்பரப்பில் 23 சதவிகிதம் இந்த விபத்தால் பாழானது.

சோவியத் யூனியனின் கடைசி பொதுச் செயலாளர் மிகைல் கோர்பச்சேவின் கூற்றுப்படி, 1986இல் செர்னோபில் ஏற்பட்ட பேரழிவு ஐந்து ஆண்டுகளுக்கு பின்னர் சோவியத் யூனியனில் சரிவை ஏற்படுத்தியது எனகிறார். செர்னோபில் வெடிப்பை ஒரு 'திருப்புமுனை' என்று விவரிக்கும் இவர் மிக அதிகமான கருத்துச் சுதந்திரத்திற்கான வாய்ப்பை அந்த வெடிப்பு திறந்து விட்டது என்று கூறுகிறார்.

சோவியத் நாடுகள் சிதறிய பின் செர்னோபில் உக்ரைன் வசம் வந்தது. தன் எல்லைக்குள் அமைதியாக அடைபட்டுக் கிடக்கும் அணு அரக்கன் எப்போது வேண்டுமானாலும் வெளிப்பட்டு, நினைத்துப் பார்க்க முடியாத பேரழிவை ஏற்படுத்துவான் என்பதை நன்கு உணர்ந்த உக்ரைன் அரசு வளர்ந்த நாடுகளின் உதவியை நாடியது. ஜி- 7 நாடுகளின் உதவியுடன் கொங்கிறீட்டால் மூடியது. ஆனால் இது 100 ஆண்டுகளுக்கு மட்டுமே தாக்குப் பிடிக்கும் என்பதால், அதற்கு முன்பு ஏதாவது நிரந்தர தீர்வு கண்டுபிடிக்க வேண்டிய நெருக்கடியில் உள்ளது உக்ரைன் அரசு.

### செர்னோபில் விபத்துக்கு விலை கொடுக்கும் அடுத்த தலைமுறை!

செர்னோபில் விபத்துக்கு முன்பு வரை அந்த இடத்தில் பிறந்த குழந்தைகள் 90 சதவிகிதம் ஆரோக்கியமானதாகவே பிறந்தனர். ஆனால், செர்னோபிலுக்கு பின்னர் 20 சதவிகிதத்துக்கும் குறைவான குழந்தைகளே ஆரோக்கியமாக பிறந்தனர். கை கால்கள் இல்லாமல், உடலின் பாகங்கள் ஊனமுற்று, மனநிலை பாதிப்புற்று, புற்று நோய்களுக்கு ஆட்பட்டு என அங்கு பிறக்கும் அடுத்த தலைமுறை, தம் முன்னோர் செய்த தவறுக்கான அதிகபட்ச விலையை கொடுத்துக் கொண்டு இருக்கின்றனர்.

ஆனால், இன்று மனிதன்தான் அவ்விடத்தில் வாழ முடியாது போனாலும் survival of fittest என்ற இயற்கை நியதிக்கு ஏற்ப பல தாவரங்களும் விலங்குகளும் அந்த இடத்தில் மீண்டும் உயிர் பெற்று பல்கிப் பெருகி வாழ ஆரம்பித்துள்ளன. வனவிலங்குகளின் சுதந்திர பூமியாக மாறியுள்ளது செர்னோபில். பல மரங்கள் மீண்டும் வளர்ந்திருந்தாலும், விஞ்ஞானிகள் இப்பகுதியில் உள்ள சில வனவிலங்கு இனங்களிடையே, கண்புரை மற்றும் அல்பினிசம் போன்ற குறைபாடுகள் காணப்படுவதாகவும் நன்மை பயக்கும் பாக்டீரியாக்களின் அளவு குறைந்த விகிதத்தில் காணப்படுவதாகவும் ஆதாரங்களுடன் கண்டறிந்துள்ளனர்.

இருப்பினும், மூடப்பட்ட மின்நிலையத்தைச் சுற்றி மனித நடவடிக்கைகள் விலக்கப்பட்டதன் காரணமாக லின்க்ஸ் எனப்படும் காட்டுப் பூனை முதல் மான், மரைகள், ஓநாய்கள் வரை பல வனவிலங்குகளின் எண்ணிக்கை, பலமடங்கு அதிகரித்துள்ளது. மனிதன் விலகும் இடங்களில் இயற்கை செழிக்கும் என்பதற்கான இன்னொரு உதாரணம் இது.

ஒரு காலத்தில் சோவியத் யூனியனின் மிகப்பெரிய அணு உலைகளை தாங்கி பரபரப்பாக இயங்கிக்கொண்டு இருந்த இந்த இடம் இன்று, இனி எப்போதுமே மனித இனம் வாழ முடியாத மாயான பகுதியாக மாறி அமைதி காக்கிறது. சோவியத் யூனியனின் வெற்றி என்று பிரமிப்பாக பார்த்த விஷயம் இன்று அதன் தோல்வி என்று பரிதாபமாக நோக்கப்படுகிறது. இது ஒரு பைரிக் வெற்றி (Pyrrhic victory). பேரழிவுகளை ஏற்படுத்தும் தோல்விக்கு சமமான ஒரு வெற்றி. இந்த தோல்வியின் கசப்பை இன்னும் பல இலட்சம் ஆண்டுகளுக்கு அங்கே வாழப்போகும் உயிர்கள் நுகரப்போகின்றன என்பதுதான் பெரும் சோகம்.

மனிதனின் அதிகார வெறிக்கும், ஆதிக்க வேட்டைக்கும் பலியாகும் அப்பாவி உயிர்கள் இன்றும் செர்னோபிலின் வாரிசுகளாக வந்து பிறந்து கொண்டேதான் இருக்கின்றார்கள். அழிவின் பொருட்டு ஆக்கப்படும் எதுவுமே இரு பக்கமும் சிதைக்கும் கூர்வாள் என்பதை செர்னோபிலின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் வரலாற்றுக்கு சொல்லிக் கொண்டே இருக்கும்!

# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை - 7
வினாத்தாள் II

நேரம் - 45 நிமிடம்
ஆசிரியர் - சரத்பாபு

(15) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.
தாத்தா ஆவாத? ..............................

(16) உங்களது எதிர்கால சந்ததியினரின் வாழ்விற்காக "இயற்கைக் காடுகளைப் பாதுகாப்போம்" எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்களை எழுதுங்கள். (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெறவேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்கவேண்டும்.)

1. ..............................
..............................
2. ..............................
..............................
3. ..............................
..............................

தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடையை எழுதுக

(17) தரப்பட்டுள்ள எண்ணிற்கு அடுத்துவரும் எண்ணை எழுத்துக்களில் எழுதுக.
23410 ..............................


(18)

| | |
|---|---|
| 2 | 7 |
| 8 | |

அடைப்பினுள் தரப்பட்டுள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி, அமைக்கத் தக்க மிகப்பெரிய எண்ணுக்கும் மிகச் சிறிய எண்ணுக்கும் இடையிலான வித்தியாசம் எத்தனை? ..............................

(19)
(i) தரப்பட்டுள்ள உரோமன் எண்ணிற்கு அடுத்துவரும் எண்ணை எழுதுக.
XIX, ..................
(ii) 5 தீக்குச்சிகளைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க 20 க்கு குறைந்த மிகப்பெரிய உரோமன் எண்ணை எழுதுக ..............................

20) தரப்பட்டுள்ள எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.
(i) 2, 6, 7, 12, 12..................
(ii) 1, 3, 9, 27..................

(21)


(i) இங்கு தரப்பட்டுள்ள உருவினுள்ளே எத்தனை செங்கோணங்கள் உள்ளன?..............................
(ii) இவ்வுருவைச் சமச்சீராகப் பிரிக்கும் கோட்டினை வரைக (உருவில் வரைக)

(22) காவியா, கனுயா, காருண்யா ஆகியோர் தலா ரூபா 300 வீதம் சேர்த்த பணத்தில் ரூபா 630 க்கு அப்பிள் பழங்கள் வாங்கினார்கள்.
(i) பழங்கள் வாங்கிய பின், எஞ்சிய பணம் எவ்வளவு?..............................
(ii) மீதிப் பணத்தைச் சமமாக மூவரும் பகிர்ந்து கொண்டால் காருண்யாவுக்குக் கிடைத்த பணம் எவ்வளவு? ..............................

(23) நள்ளிரவு 12.00 மணிக்கு ஹட்டனில் இருந்து புறப்பட்ட பேருந்து பி.ப.2.30மணிக்கு மட்டக்களப்பு நகரை வந்தடைந்தது.
(i) பேருந்து வந்தடைந்த நேரத்தை 24 மணித்தியாலக் கடிகாரத்திற்கேற்ப எழுதுங்கள்.
.................. மணித்தியாலம்
(ii) பேருந்து ஹட்டனிலிருந்து புறப்பட்ட நேரத்தை 24 மணித்தியாலக் கடிகார நேரமாக எழுதுக.


24) அட்டவணையிலுள்ள வெற்றிடத்தை நிரப்புங்கள்.

| பொருள்கள் | அளவு | ஒன்றின் விலை | செலுத்திய பணம் |
|---|---|---|---|
| | | ரூ. சதம் | ரூ. சதம் |
| 1) பேனா | 3 | 17.00 | .................. |
| 2) பென்சில் | ... | 8.00 | 40.00 |
| 3) கொப்பி | 2 | 18.00 | .................. |
| | | மொத்தம் | .................. |

(25) இரு நகரங்களுக்கிடையிலான தூரம் உருவில் தரப்பட்டுள்ளது.
(i) அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, கொழும்பு ஊடாக புத்தளம் வரையுள்ள தூரம் எவ்வளவு? ..............................
(ii) காலி, கொழும்பு ஊடாக புத்தளம் வரையுள்ள தூரம் எவ்வளவு? ..............................

| | | | | புத்தளம் |
|---|---|---|---|---|
| | | | கொழும்பு | 142 |
| | | காலி | 115 | ? |
| | மாத்தறை | 45 | 160 | ? |
| அம்பாந்தோட்டை | 80 | 125 | 240 | 382 |


(26) (i) வரைபிற்கேற்ப அட்டவணையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புங்கள்.
(ii) அட்டவணையிலுள்ள தகவல்களுக்கேற்ப வரைபை வரைந்து நிழற்றுக.




| செல்லப் பிராணி | வளர்க்கும் மாணவர் தொகை |
|---|---|
| * கிளி | 35 |
| * பூனை | 50 |
| * நாய் | ..... |
| * முயல் | 50 |

(27) ஒரு பழக்கடையொன்றில் 8 தோடம்பழங்கள் வீதம் 9 பெட்டிகளும், 6 தோடம்பழங்கள் வீதம் கொண்ட பெட்டிகள் 5 உம் உள்ளன. அங்குள்ள 14 பெட்டிகளிலுமுள்ள தோடம்பழங்கள் எத்தனை? ..............................

(28) கீழே தரப்பட்டுள்ள மூன்று கடதாசி நாடாக்களையும் ஒன்றாக இணைக்கும் போது தோன்றும் உருவின் சுற்றளவு யாது? ..............................




(29) நோயாளிக்கு ஒருவேளை 2 மாத்திரைகள் வீதம் நாளொன்றில் 3 வேளைகள் உள்ளெடுக்க வேண்டுமென மருத்துவர் கூறியுள்ளார். இவருக்கு 68 மாத்திரைகள் ஒரு நாள் காலையில் வழங்கப்பட்டால்,
(i) இம்மாத்திரைகள் எத்தனை நாட்களுக்குப் போதுமானது? ..............................

# அரசியல் குழப்பத்துக்கு முற்றுப்புள்ளிவைக்க அமைச்சரவையை மறுசீரமைக்கத் தீர்மானம்

## முக்கிய விடயதானங்கள் கைமாறும் எனத் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 27

இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் குழப்பத்துக்கு முற்றுப்புள்ளிவைக்க ஜ/லை மாதம் அமைச்சரவையை மறுசீரமைக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தீர்மானித்துள்ளார் எனச் சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்படி முக்கிய சில அமைச்சுகள் கைமாறவுள்ளதுடன், விடயதானங்களும் கைமாற்றப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அமைச்சரவை மறுசீரமைப்பின்போதே நீதி மற்றும் பொருளாதார விவகார அமைச்சு பதவி பஸில் ராஜபக்சவுக்கு வழங்கப்படவுள்ளது.

விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோரின் அமைச்சு பதவிகள் மாற்றப்படலாம் அல்லது அவர்கள் வகிக்கும் அமைச்சுகளில் கீழுள்ள சில அரச நிறுவனங்கள் ஏனையோருக்கு மாற்றப்படலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, அரச நிறுவனங்களின் பிரதானிகள் பதவியிலும் மாற்றம் வரக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# அபாயம் இன்னும் குறையவில்லை; புதிய கொத்தணிகள் உருவாகலாம்

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, ஜுன் 27

**“இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை சற்று குறைவடைந்திருந்தாலும், புதிய கொத்தணிகள் உருவாகக்கூடிய அபாயம் இன்னும் குறையவே இல்லை.”**

- இவ்வாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

”கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 3 ஆயிரமாக இருந்தவந்த நிலையில் கடந்தவியாழக்கிழமை தொடக்கம் 2ஆயிரத்துக்கும் குறைவான தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். இதனை அடிப்படையாகக் கொண்டு அடுத்துவரும் நாட்களில் தொற்றாளர்களின் எண்ணிக்கை மேலும் குறைவடையக்கூடும் என்ற முடிவுக்கு வந்துவிட முடியாது.

புதிய கொத்தணிகள் உருவாகுவதற்கான அபாயம் முன்னர் இருந்தது போலவே தற்போதும் இருக் கின்றது. குறிப்பாக வர்த்தக நிலையம், பொதுப்போக்கு வரத்து ஊடாகத் தொற்று பரவக் கூடும். எனவே, தமக்கான சுகாதாரப் பாது காப்பை உறுதிப்படுத்திக் கொள்வதுடன், பொதுநலன் கருதியும் மக்கள் செயற்பட வேண்டும்.

கொரோனா என்பது பொது எதிரி. அதனை ஒழிப்பதற்கான நடவடிக்கைக் குப் பெருந்தொகை செலவாகின்றது. போர் காலத்தில் செலவிடுவது போல் பெருந்தொகை இதற்காக செலவிடப்படுகின்றது. எனவே, கொரோ னாவை ஒழிப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்” - என்றார். (இ)

# தமிழ் அரசியல் கைதிகளை வைத்து நாமலை ஜனாதிபதியாக்க நகர்வா?

## முற்போக்குக் கூட்டணி சந்தேகம்



கொழும்பு, ஜுன் 27

”நாமல் ராஜபக்சவை முன்னிலைப்படுத்தி பரப்புரை முன்னெடுத்து, அவரை எதிர்காலத்தில் ஜனாதிபதியாக்கும் நோக்கில்கூட தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுகின்றது.”

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணி தெரிவித்துள்ளது.

தமிழ் அரசியல் கைதிகள் 16 பேர் ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே கூட்டணியின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

”எமது நல்லாட்சியின் போதும் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். இதற்கான நடவடிக்கை நல்ல நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டது. ஆனால், தற்போது திட்டமிட்ட அடிப்படையில் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் இரு நாட்களுக்கு முன்னர் அமைச்சர் நாமல் ராஜபக்ச நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். அரசு தொடர்பில் நல்லதொரு விம்பத்தை அதன்மூலம் கட்டியெழுப்பினார்.

இந்நிலையில் 16 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். எனவே, நாமல் ராஜபக்சவை முன்னிலைப்படுத்தி அவரை எதிர்காலத்தில் ஜனாதிபதியாக்குவதற்காக நகர்வாகக்கூட இது இருக்கலாம் என்ற சந்தேகம் எழுகின்றது.

தமிழ் மக்கள் மீதுள்ள அக்கறையால் இவர்களை விடுவித்திருந்தால், ஏனையோரையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாக இருந்தால் அதனை நிச்சயம் நாம் வரவேற்போம். ஆதரவு வழங்குவோம்” - என்றார். (இ)

# கேகாலை மாவட்டத்தில் 4 பிரதேசங்கள் முடக்கம்

கேகாலை, ஜுன் 27

கேகாலை மாவட்டத்தில் நான்கு கிராம சேவகர் பிரிவுகள் நேற்றுக் காலை 6 மணி முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.



இதன்படி மாவனல்ல பொலிஸ் பிரி வுக்குட்பட்ட இகுல் ஓய, மஹா வத்த ஆகிய கிராம சேவ கர் பிரிவுகளும், தெஹி யோவிட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்கொட கிராம சேவகர் பிரிவில் டென்ஸ்வர்த் தோட்டமும், கேகாலை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட எலமட கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கம்பஹா மாவட்டத்தில் கிரிபத்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாஹேன கிராம சேவகர் பிரிவு தனிமைப்படுத்தலில் இருந்து நேற்றுக் காலை விடுவிக்கப்பட்டுள்ளது என்றும் இராணுவத் தளபதி மேலும் கூறினார். (இ)



# நுகர்வோர் அதிகார சபை சட்டத்தில் வந்தது திருத்தம்

கொழும்பு, ஜுன் 27

நுகர்வோர் விவகார அதிகார சபை சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனூடாக வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகை அதிகரிக்கப்படும் என

சந்தைப்படுத்தல் கூட்டுறவு சேவைகள், சந்தை அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார். இதற்கான அமைச்சரவை அனுமதியைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை இரண்டு வாரங்களில் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுவரை 5 ஆயிரம் முதல் 25 ஆயிரம் ரூபாவுக்குள்ளேயே அபராதம் விதிக்கப்படுவதால், வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் எவ்வித அச்சமுமின்றி தவறிழைக்கின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட் டினார். நுகர்வோரின் நலன் கருதியே இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் கூறினார். (இ)

# பஸிலுக்காக எம்.பி. பதவியை துறப்பவருக்கு முக்கிய பதவி

கொழும்பு, ஜுன் 27

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளரான பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் வருவதற்காக தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறப்பவருக்கு முக்கிய பதவி வழங்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பஸிலுக்காகத் தேசியப்பட்டியல் எம்.பி. பதவியை துறப் பதற்கு “மொட்டு“ கட்சியின் நான்கு உறுப்பினர்கள் முன்வந் துள்ளனர் எனவும், இதில் பேராசிரியர் ரஞ்சித் பண்டாரவே பெரும்பாலும் பதவி துறக்கக் கூடும் எனவும் தெரியவருகின் றது.

அவ்வாறு பதவி துறக்கும் பேராசிரியர் ரஞ்சித் பண்டாரவுக்கு மத்திய வங்கியின் ஆளுநர் பதவி அல்லது வெளிநாட்டுத் தூதுவர் பதவி வழங்கப்படக்கூடும் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. (இ)





## பொருளாதார சுபீட்சத்துக்கு ஆலோசனை கவுன்சில்:

# பார்ப்பனீய ஆதிக்கமா?




## நிபுணத்துவத்தை மட்டுமே கருத்தில்கொள்ளும் ஸ்டாலின்!



**- பகவான் சிங் - தமிழகத்தின் சிரேஷ்ட பத்திரிகையாளர்**

தமிழ்நாடு நிதி அமைச்சர் பழனிவேல் தங்கதுரை, மே 7ஆம் திகதி தனது தி. மு. க. அரசு பதவியேற்றதும், மாநில நிதி நிலைமை பெரிதும் குழப்ப நிலையில் இருப்பதாக தெரிவித்தார். மொத்த கடன் 4.9 லட்சம் கோடி என்பது ஒரு குறைமதிப்பீடு. ஏனெனில், வருடமொன்றுக்கு வட்டி மட்டும் 50 ஆயிரம் கோடி ரூபா செலுத்தப்படுகையில், ஏதோ எங்கோ மறைந்திருக்கிறதென்பது வெளிப்படை என்று அவர் கூறுகிறார். முன்னைய அ. இ. அ. தி. மு.க. அரசாங்கத்தின் மறைக்கப்பட்ட நிதி தொடர்பான பொய்கள் அனைத்தையும் வெளிக்கொணர்வதாக உறுதியளித்த அவர், விரைவில் உண்மையான நிதி நிலைமை குறித்த வெள்ளை அறிக்கை ஒன்றை வெளியிடுவதாகவும் தெரிவித்திருந்தார். அத்துடன், மக்களுக்கு எதையும் மறைக்காது, அனைத்து நடவடிக்கைகளிலும் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தும் முதல்வர் மு. க. ஸ்டாலினின் அறிவுறுத்தலை செயற்படுத்துவதாகவும் அவர் உறுதியளித்தார். ஜூலை இரண்டாம் வாரத்தில் சட்டசபையில் சமர்ப்பிக்க மாநில பட்ஜட்டைத் தயாரிக்கும் அதேவைளே, இந்த வெள்ளை அறிக்கை தயாரிப்பிலும் அவர் இரவு பகலாக செயல்படுவதை உத்தியோக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பட்ஜட்டுக்கு முன்னதாக ஸ்டாலின், மருத்துவ சோதனைக்காக லண்டனுக்கு விரைவு பயணம் ஒன்றை மேற்கொள்ள விருப்பதாகவும் வதந்திகள் எழுகின்றன.

வெள்ளை அறிக்கையும் மாநில பட்ஜட்டும் துரித கதியில் தயாராகும் அதேவேளை, மூன்றாவதாக மற்றொரு முக்கிய அலுவலும் பழனிவேல் தங்கதுரை அலுவலகத்தில் நடைபெறுகிறது. மாநிலத்தின் பொருளாதார ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நீண்டகால நிரந்தர தீர்வுகளை அளிக்கும் விதத்தில் எதிர்பார்க்கப்படும், உலக நிபுணர்களைக் கொண்டதான பொருளாதார ஆலோசனைக் கவுன்சில் ஒன்றின் உருவாக்கம் அது.

தமிழ்நாடு எதிர்கொள்ளும் கடுமையான பொருளாதார நெருக்கடியை கொவிட் - 19 அதிகப்படுத்தியுள்ளது. அதேவேளை, அரசாங்கம் விரைவான பொருளாதார வளர்ச்சி, சமூக நீதி, சமத்துவம் என்பவற்றை புதிய வேலைத் திட்டங்களின்மூலம் அளிக்கும் என்ற பெரும் எதிர்பார்ப்பை மக்கள் கொண்டிருக்கின்றனர். எனவே, தமிழ் நாட்டின் பொருளாதாரம், சமூகம், அரசியல் என்பவற்றுடன் இந்திய, உலக பொருளாதார போக்கையும் தெரிந்தவர்களாக உலகளாவிய ரீதியில் திகழும் பொருளாதார நிபுணர்களுடன் உருவாகும் முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் கவுன்சிலின் சிபார்சுளின் அடிப்படையில் அரசாங்கம் மாநிலத்தின் பொருளாதாரத்தைப் புதுப்பித்து, சமூகத்தின் எல்லா பிரிவினருக்கும் பொருளாதார வளர்ச்சியின் பயன் சென்றடைவதையும் உறுதிசெய்யும்.

ஸ்டாலினும் பழனிவேல் தங்கதுரையும் தமக்கு ஆலோசனை வழங்க இதைவிட சிறந்த ஓர் அணியைத் தேர்ந்திருக்க முடியாது. மசாச்சுசெற் தொழில்நுட்ப நிறுவனத்தின் வறுமை ஒழிப்பு, பொருளாதார அபிவிருத்தி துறைப் பேராசிரியையான நோபல் பரிசுபெற்ற எஸ்தர் டுவ்லோ இந்த ஐவர் அணியின் தலைவி. இந்தியன் றிசேர்வ் வங்கியின் முன்னாள் கவர்ணர் பேராசிரியர் ரகுராம் ராஜன், இந்திய அரசின் முன்னாள் பிரதம பொருளாதார ஆலோசகர் டாக்டர் அரவிந் சுப்பிரமணியன், பொருளாதார அபிருத்தி நிபுணர் பேராசிரியர் ஜீன் ட்ரேசா, மத்திய அரசின் முன்னாள் நிதி செயலாளரும் இந்திய பிரதமரின் முன்னாள் பொருளாதார ஆலோசகருமான டாக்டர் எஸ். நாராயண் ஆகியோர் இவர்கள்.

உலக கௌரவம்மிக்க இப் பொருளாதார நிபுணர்கள் ஒவ்வொருவருடனும் பழனிவேல் தங்கதுரை பேசி, இக் கவுன்சிலுக்கான அவர்களின் சம்மதத்தை பெற்றதாக அறியப்படுகிறது. அமெரிக்காவிலும் சிங்கப்பூரிலும் பழனிவேல் தங்கதுரையின் நிதி முதலீட்டு வங்கித் துறையிலான அநுபவம், இவர்களுடனான இந்த இணக்கத்தை ஏற்படுத்துவதில் துணையாகியது. மத்திய அரசின் முன்னாள் நிதி அமைச்சர் ப. சிதம்பரமும் இதனை வரவேற்றுள்ளதாக அறியப்படுகிறது. நாராயணன் தவிர்ந்த மற்றைய நால்வரும் முக்கிய சர்வதேச நிறுவனங்களில் ஆலோசகர்களாகவும் உறுப்பினர்களாகவுமிருப்பது, மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு மருந்தாகும் விதத்தில், சர்வதேச முதலீட்டாளர்களை தமிழ்நாட்டுக்கு ஈர்ப்பதில் உதவலாம், எஸ்தர் டுவ்லோவுக்கும் அவரது கணவர் அபிஜித் பெனர்ஜிக்கும் 2019ஆம் ஆண்டில் பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. பேராசிரியர் அபிஜித் பெனர்ஜி, கோவிட் - 19இன் பின்னர் மாநிலத்தை பொருளாதார வழிப்படுத்த, மேற்கு வங்க முதல்வர் மம்தா பனர்ஜியின் உலக ஆலோசகர் குழுவுக்கு தலைமை தாங்குகிறார்.

பேராசிரியர் அபிஜித் பனர்ஜி, மசாச்சுசெற் தொழில்நுட்ப நிறுவனத்தின் அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை ஒழிப்பு உலக ஆய்வு மையத்தின் இணை ஸ்தாபகர். இதன் இயக்குநர்களில் ஒருவரான எஸ்தர் டுவ்லோ, 2014இல் ஜெயலலிதா முதலமைச்சராகவிருந்தபோது ஏற்படுத்தப்பட்ட ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்கீழ், தமிழ்நாட்டின் சில வறுமை ஒழிப்பு திட்டங்களில் ஏற்கனவே ஈடுபட்டிருந்தவர். இப்போது அவர் ஸ்டாலின் ஆலோசனைக் குழுவின் தலைவராக செயல்படுகிறார். மற்றோர் உறுப்பினரான எஸ். நாராயண், பிரதமர் வாஜ்பாயின் பொருளாதார ஆலோசகராக பணியாற்றியவர்.

நிபுணர் குழுக்களை அரசு அவசரஅவசரமாக நியமிக்கிறது ஆனால், அதன் பின்னர் எதுவும் ஆவதில்லை என்று சிலர் கூறுகிறார்கள். இத்தகைய உயர் நிபுணர்கள் ஐவரை ஒன்றுசேர்ப்பது கடினமானது என்று, பொருளாதார நிபுணரான எனது நண்பர் ஒருவர் தெரிவித்தார். அவர்களின் தனிப்பட்ட அணுகுமுறைகளிலும், பாரபட்ச நோக்கிலும் வேறுபாடுகளைக் காண்பிக்காது, ஒத்திசைவான ஒரு கூட்டு அணியாக இவர்கள் செயல்படுவார்கள் என்று எதிர்பார்ப்பதிலும் அவர் தனது சந்தேகத்தை வெளிப்படுத்தினார். 'தங்கள் சொந்த பெருமைகளை புறந்தள்ளி, மற்றையவர் கருத்தை செவிசாய்க்கவும், ஏற்றுக் கொள்ளவும் தயாரான நிலையில், நடைமுறைத் தீர்வுகளைக் காணவேண்டும். இது சாத்தியமா?' - என்று, என்னை அவர் கேட்டார்.

கவுன்சிலில் இடம்பெறும் மூன்று இந்தியர்களுமே பிராமணர்களாகவிருப்பதால், தி. மு. க. அதன் பிராமணர் எதிர்ப்பு நிலைப்பாட்டை கைவிட்டுவிட்டதாக தெரிவதாக, பொருளாதார துறையில் சிரேஷ்ட பத்திரிகையாளரான எனது மற்றொரு நண்பர் சுட்டிக்காட்டினார். தலித்துகள், பிற்படுத்தப்பட்டோர் போன்றவர்களுக்கு உயர் கல்வியிலும், அரசு வேலைவாய்ப்புக்களிலும் இட ஒதுக்கீட்டுக்காக வன்மையாக பிரச்சாரம் செய்த கட்சி தி. மு. க. 'தமிழ்நாட்டில் திறமைக்கு பற்றாக் குறை (பிராமணர்கள் அல்லாதவர்களிடம்) இருக்கிறதா?' - 'இந்து' பத்திரிகையின் முன்னாள் சிரேஷ்ட வணிக ஆசிரியரான கே. ரி. ஜெகநாதன் கேட்டார்.

ஸ்டாலினும் தி. மு. க. வும் தமது 'சமூக நீதி' கொள்கைத் திட்டத்தை எந்தவிதத்திலும் நீர்த்துப் போகச் செய்யவில்லை. பொருளாதார கவுன்சிலில் ஓர் அங்கமாக, அந்த பிராமணர் மூவரின் திறமையைத் தேர்ந்தமை, அவர்களது சமூக அரசியல் நிலைப்பாட்டின் உள்ளீட்டை மட்டும் வெளிப்படுத்துவதாகவே நான் கருதுகிறேன். முதல் சில வாரங்களிலான நிர்வாக முறைகளிலேயே இப் புதிய அரசாங்கத்தை வரவேற்று, உயர் சாதி - உயர் குடி மக்கள் என்று சொல்பவர்களே பலர் பேசுவதை நான் அவதானித்திருக்கிறேன். திராவிட ஆட்சியாளர்களை 'பெரியாரிசம்' வழிப்படுத்துவதான சந்தேகம் சில உயர் குடியினரிடம் இன்னமும் இருந்தால் இது, அண்மையில் நிகழ்ந்த மாநில தேர்தலில் அ. இ. அ. தி. மு. க. அடைந்துள்ள மந்த நிலையில், அரசியல் நிலைமைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை கணிப்பதில் அவர்களின் குறுகிய நோக்கே காரணம். அத்துடன், அனைத்து ஊழல் வழக்குகளையும் விஞ்சி, ஜெயலலிதா மீதான அவர்களின் அழியாத அன்பும் போற்றுதலும் இதன் காரணம்.

நான் ஒரு தி. மு. க. உறுப்பினர் அல்லன். எந்தவொரு குறிப்பிட்ட அரசியல் சித்தாந்தத்துடனும் நான் என்னை ஈடுபடுத்த விரும்பவில்லை. அது, பத்திரிகையாளனாக எனது உணர்ச்சிவயப்படாத நேர்மைக்கு ஏற்றதல்ல. ஆனால், பிராமணர், ஹிந்தி, கடவுள் போன்ற முக்கியமான பொது விவகாரங்களில் தி. மு. க. தலைவர்களின் இரட்டைப் பேச்சு மற்றும் போலித்தனத்தை குற்றஞ்சாட்டும் தி. மு. க. விமர்சகர்களின் தொடர்ச்சியான விமர்சனங்களை மறுக்க நான் உதவமுடியாது. 'நாங்கள் பார்ப்பனர்களை எதிர்க்கவில்லை, பார்ப்பனீயத்தைத்தான் எதிர்க்கிறோம்' - என்று, தி. மு. க. வின் சிரேஷ்ட தலைவரான க. அன்பழகன், ஜெயலலிதா முதலமைச்சராகவிருந்த வேளையில் சட்டசபை விவாதமொன்றில் வலியுறுத்திச் சொன்னார். ஜெயலலிதா பிராமணர் என்பதால், அவரைக் குறிவைத்து பேசப்பட்டதாக சிலர் சொன்னார்கள்.

தி. மு. க. வின் கடவுள் எதிர்ப்பு, ஹிந்தி ஏதிர்ப்பு பற்றி கட்சி ஸ்தாபகர் அண்ணாதுரை திரும்பத் திரும்ப சொன்னார்: 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்'. தி. மு. க. வின் வலுவான ஹிந்தி எதிர்ப்பு நிலைப்பாடு தொடர்பில் 'நாங்கள் ஹிந்தியை எதிர்க்கவில்லை, ஹிந்தி திணிப்பைத்தான் எதிர்க்கிறோம்' என்று, கட்சித் தலைவர்கள் வாதிட்டார்கள்.

பொருளாதார கவுன்சில் உருவாக்கத்தில், நிபுணத்துவத்தை மட்டுமே கருத்தில் கொண்டது ஸ்டாலின் மாத்திரம்தான் அல்ல என்பது, சுவாரஸ்யமானது. தந்தையார் கருணாநிதிகூட, பல பிராமணர்களைத் தனது நண்பர்களாகவும் ஆலோசகர்களாகவும் கொண்டிருந்தார். அவரது அந்தரங்க வைத்திய நிபுணர் 'குட்டி' கோபால், வழக்கறிஞர் வி. பி ராமன், 'கல்கி' ஆசிரியர் சாவி. பத்திரிகையாளர் சின்ன குத்தூசி, இந்தியன் சிமெந்து நிறுவனத்தின் என். சிறிநிவாசன் என்போர் அவர்களில் சிலர். இந்தியாவில் மூளை, நரம்பியல் துறையின் தந்தையாக கருதப்படும் மறைந்த டாக்டர் பி. ராமமூர்த்தி கருணாநிதியின் நெருங்கிய நண்பர். கருணாநிதிக்கு விருப்பமான பிராமண அரசு அதிகாரிகளில் எஸ். குகன் நன்கு அறியப் பட்டவர்.


பிராமணர், ஹிந்தி, கடவுள் என்ற சுவாரஸ்யமான இந்த முத்தரப்பு விவகாரங்கள் தொடர்பில், அடுத்த வாரம் சற்று விரிவாகவும் சுவாரஸ்யமான நிகழ்வுகளுடனும் நாம் பார்க்கலாம். ■

ஈழநாடு



# காலத்தினால் சரியாகப் போடப்பட்ட கணக்கு: டொமினிக் ஜீவா

**இறக்கும் போது 93 வயதை பூர்த்தி செய்திருந்த அவர் நாற்பத்தாறு ஆண்டுகளுக்கு மேல் நானூறு இதழ்களுக்கு மேல் 'மல்லிகை'யை இடைவிடாது வெளியிட எத்தனை சிரமங்களை எதிர்கொண்டு இருப்பார்? ஐம்பதுக்கு மேற்பட்ட நூல்களை மல்லிகைப் பந்தல் பதிப்பகத்தின் ஊடாக பதிப்பித்து வெளியிட எத்தனைத் தடைகளைக் கடந்திருப்பர் ?**



**94 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு ஒரு நினைவுக் குறிப்பு**

**மல்லியப்புசந்தி திலகர்**

இலக்கிய வழிவந்த அரசியல் சமூக ஆளுமையான டொமினிக் ஜீவாமறைந்தை அடுத்து வரும் அவரது பிறந்த நாளில் அவருக்கான அஞ்சலியாக, அவரை நினைவுறுத்துவதாக,அவரை கௌரவிப்பதாக, அவர் பற்றிய நினைவுகளைப் பகிர்ந்து கொள்வதும் அவசியமானது.

இறக்கும் போது 93 வயதை பூர்த்தி செய்திருந்த அவர் நாற்பத்தாறு ஆண்டுகளுக்கு மேல் நானூறு இதழ்களுக்கு மேல் 'மல்லிகை'யை இடைவிடாது வெளியிட எத்தனை சிரமங்களை எதிர்கொண்டு இருப்பார்? ஐம்பதுக்கு மேற்பட்ட நூல்களை மல்லிகைப் பந்தல் பதிப்பகத்தின் ஊடாக பதிப்பித்து வெளியிட எத்தனைத் தடைகளைக் கடந்திருப்பர் ? என எண்ணிப் பார்க்கையில் ஜீவாவிடம் இருந்த மன உணர்வும், தைரியமும் , அர்ப்பணிப்பும் எமக்கு இல்லையோ என மனது கணக்குப் போடுகிறது.

'மல்லிகை' யை வெளியிட்டது மட்டுமா அவரது பணி ? அதற்கான ஆக்கங்களைக் கேட்டுப் பெறுதல், அவற்றைப் பிரசுரத்துக்காய் தெரிவு செய்தல், அவற்றைக் கணணி அச்சுமுறை வருவதற்கு முன்னான காலத்தில் letter press, offset press முறைமைகளில் அச்சுக்கு தயார் செய்தல், யுத்த காலத்திலும் அச்சிடுதல், அதனை விநியோகித்தல் கூடவே 'மல்லிகை'க்கு வரும் விமர்சனங்களையும் எதிர்கொள்ளுதல் என ஓர் இயக்கமாக இயங்கிய டொமினிக் ஜீவா எனும் தனிமனிமனிதன் இன்னும் இன்னும் விசாலமாக எம் முன்னே விரிகிறார்.

இதனையும் தாண்டி சமூகப் போராளியாக, அரசியல் செயல்பாட்டனாகவெல்லாம் இந்த மனிதரால் எப்படி இயக்கம் கண்டிருக்க முடிந்திருக்கிறது? அதுவும் இந்த இயக்கத்திற்கான மையப்புள்ளியான தனது தொழிலையே வாழ்வாதரத்துக்காகவும் செய்து கொண்டு வாழ்ந்தவரால்!

யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்லாதை இடம் பெயர்ந்து தலைநகர் கொழும்புக்கு இடம்பெயர்ந்த பின்னரும் தனது எழுத்து - இலக்கிய - இதழியல் - அரசியல் எனது தான் சார்ந்து வந்த செல்நெறியில் விலகிச் செல்லாமல், சரி பிழைகளுக்கு அப்பால் அதனைத் தொடர்ந்துள்ளார்.

சாதியத்துக்கு எதிரான மிக உறுதியான கருத்து நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாலும் சாதி அடையாளங்களைக் கொண்டு வெறுப்பு கொள்ளாதவராக அனைவரையும் அரவணைத்துப் போகும் பண்பாளராகவே அவர் பார்க்கப்படுகிறார். அவர் பக்க நியாயங்களை அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் அதனை முன்வைப்பவராக இருந்துள்ளார்.

இனங்களுக்கு இடையேயான நல்லுறவைப் பேணுவதிலும் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டவராகவே ஜீவாவின் செயற்பாடுகள் இருந்துள்ளன.

அரசியல் கருத்து நிலையில் முரண்படக்கூடிய நிலையில் இருந்த போதும் அதனைத் தனிப்பட்ட குரோதமாக கருதாத மனங் கொண்டவராக பலராலும் சிலாகிக்கப்படுகிறார்.

இவை அனைத்திற்கும் காரணம் அவர் போட்ட கணக்கு சரியானதாக இருந்தது என்பதே யதார்த்தமான உண்மை. ஐந்தாம் வகுப்பில் தனது ஆசிரியர் போட்ட தவறான கணக்கை சரியான கணக்காக மாற்றிப் போட்ட டொமினிக் அதற்காக பெற்றுக் கொண்ட வெகுமானத்திற்கு மாறான அவமானமே இந்த அத்தனைப் பேரியக்கத்துக்குமான தனிமனித ஆளுமையாக அவரை முன்னிறுத்துகிறது.

அவர் வாழ்ந்த போதும் மறைந்த பின்னரும் கூட அவரது அரசியல், எழுத்து, செயற்பாடு, உரைகள் என அனைத்தும் விமர்சனத்துக்கும் மதிப்பாய்வுக்கும் உள்ளாகின்ற போதும், அந்த தனிமனித ஆளுமையில் ஆச்சரியம் கொள்வதில் எங்கும் மாறுபாடு தெரிவதாக இல்லை. எல்லோரையுமே ஜீவாவின் தனிமனித ஆளுமை ஆகர்சித்துக் கொண்டதாகவே இருக்கிறது.

ஆக, டொமினிக் ஜீவா, 'காலத்தினால் சரியாகப் போடப்பட்ட கணக்கு' என்றாகி நிற்கிறார். அந்தக் கணக்கில் தவறு காண முடியாதபடி அவர்போல இயங்குவதற்கு யார் வேண்டுமானாலும் முயற்சித்துப் பார்க்கலாம். அங்கே டொமினிக் ஜீவா அனைவருக்குமே ஆசானாகி நிற்பார்.

ஆண்டுதோறும் அவரது நினைவு நாளில் அல்லது பிறந்த நாளில் உலகின் எங்காவது மூலையில் இருந்தேனும் ஒரு நினைவு மலரை வெளியிட முடியுமெனில் அதுவே டொமினிக் ஜீவாவுக்கான மரியாதையுடனும் அவரின் உழைப்பை மதிப்பு செய்யும் 'மல்லிகை'அஞ்சலியாகவும் அமையும். ■

---

# சீனாவிலும் பரவும் "டெல்டா திரிவு"




**தென்கிழக்கு சீனாவில் டெல்டாவின் பரவல் காரணமாக, இப்போது சீனாவிலேயே தயாரிக்கப்பட்ட தடுப்பூசிகளின் செயல்திறனில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. தடுப்பூசி போடப்பட்டவர்களில் எத்தனை நபர்களுக்கு புதிய தொற்று ஏற்பட்டது என்பதை சீன அதிகாரிகள் வெளியிடவில்லை.**

**- எஸ்.சங்கீதா**

**2019** இல் வைரஸின் ஆரம்ப பரவலைக் காட்டிலும் இது மிக ஆபத்தான அறிகுறிகளுடன் காணப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்கள் விரைவாக நோய்வாய்ப்படுகிறார்கள் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு, சீனாவில் மீண்டும் ஒரு பூதம் கிளம்பியுள்ளது. அதாவது, சீனாவில் இப்போதுள்ள கொரோனா வைரஸின் டெல்டா மாறுபாட்டின் வேகமாகவும் வீரியமாகவும் பரவி வருவதுதான் அது. 2019 இல் வைரஸின் ஆரம்ப பரவலைக் காட்டிலும் இது மிக ஆபத்தான அறிகுறிகளுடன் காணப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்கள் விரைவாக நோய்வாய்ப்படுகிறார்கள் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

அறிகுறிகள் தோன்றிய மூன்று முதல் நான்கு நாள்களுக்குள் 12% நோயாளிகள் கடுமையாகவும் மோசமாகவும் நோய்வாய்ப்பட்டுள்ளனர் என்று குவாங்சோ நகரில் உள்ள சன் யாட்-சென் பல்கலைக்கழகப் பராமரிப்பு மருத்துவ இயக்குநர் குவான் சியாங்டாங் கூறியுள்ளார். கடந்த காலத்தில் இந்த விகிதம் 2மூ அல்லது 3% ஆக மட்டுமே இருந்தது. முன்பு மிக அரிதாகத்தான் 10% வரை இருந்தது என்றும் அவர் கூறினார்.

இப்போது தென்கிழக்கு சீனாவில் கொரோனா வைரஸின் டெல்டா மாறுபாடு அதிகமாகப் பரவி வருகிறது. 2019 ஆம் ஆண்டின் இறுதியில் மத்திய நகரமான வுகானில் வைரஸின் ஆரம்ப வடிவம் பரவத் தொடங்கிய போது இருந்த அறிகுறிகளிலிருந்து இவை வேறுபட்டவை. அதோடு, அதிக ஆபத்தானவையும்கூட என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். ஏராளமான நோயாளிகள் நோய்வாய்ப்பட்டுள்ளனர் அவர்களின் நிலைமை மிக விரைவாக மோசமடைந்து வருகிறது என்று மருத்துவர்கள் அரசு தொலைக்காட்சியில் தெரிவித்தனர்.

தொற்று அறிகுறிகளில் ஒன்றான காய்ச்சல் ஐந்தில் நான்கு பங்கினருக்கு ஏற்பட்டிருக்கிறது. நோயாளிகளின் உடலில் கண்டறியப்பட்ட வைரஸ் செறிவுகள் முன்பு பார்த்ததைவிட உயர்ந்த அளவுக்கு ஏறி, பின்னர் மெதுவாக மட்டுமே குறைவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

இங்கிலாந்து மற்றும் பிரேசிலில் உள்ள மருத்துவர்களும் அந்த நாடுகளில் பரவிய மாறுபாடுகளில் இதேபோன்ற போக்குகளைக் கண்டறிந்துள்ளனர். ஆனால், அந்த வகைகளின் தீவிரம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

சீனாவிலிருந்து வரும் தகவல்கள் டெல்டாவால் ஏற்படும் ஆபத்துகளின் அறிகுறிகள்தாம். இந்த வைரஸ் திரிபு இந்தியாவில்தான் முதன்முதலில் அடையாளம் காணப்பட்டது. இங்கு நோய்ப்பரவல் மற்றும் அதிகமான இறப்புகளுக்குக் காரணமாக இருந்த டெல்டா, அடுத்து இங்கிலாந்தில் வேகமாகப் பரவிவருகிறது. இது அதிகமாகத் தொற்றக்கூடியதாக இருப்பதாகவும், இரண்டு டோஸ்களில் ஒன்றை மட்டுமே பெற்ற சிலருக்கும் தொற்று ஏற்படக்கூடும் என்றும் அங்குள்ள மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

தென்கிழக்கு சீனாவில் டெல்டாவின் பரவல் காரணமாக, இப்போது சீனாவிலேயே தயாரிக்கப்பட்ட தடுப்பூசிகளின் செயல்திறனில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. தடுப்பூசி போடப்பட்டவர்களில் எத்தனை நபர்களுக்கு புதிய தொற்று ஏற்பட்டது என்பதை சீன அதிகாரிகள் வெளியிடவில்லை.

செஷெல்ஸ் மற்றும் மங்கோலியா உட்பட சீனத் தடுப்பூசிகள் பரவலான பயன்பாட்டில் உள்ள சில நாடுகளிலும் தடுப்பூசி போடப்பட்டவர்களிடையே நோய்த்தொற்றுகள் அதிகரித்து வருகின்றன.

இந்தப் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் சோதனைகள் மற்றும் தனிமைப்படுத்தல்கள் தொடர்ந்து நடந்தாலும் தொற்றுப் பரவல் குறையவில்லை என்பது தான் சீனாவில் பிரச்னையாக இருக்கிறது. ■

# மாணவர்களின் எதிர்பார்ப்பிற்கான ஒரு வழிகாட்டி



"கற்க கசடற" கல்வியே செல்வம். கல்வியே ஒரு மனிதனின் உன்னதமான பாதையை தீர்மானிக்கும் கருதுகோள். அறிவுப்பசி தேவையுள்ள நிலையில் உள்ள ஒருவன் சிறுபராயத்தில் இருந்தே முன்பள்ளிக்கல்வி, ஆரம்பப் பாடசாலை என்றும், குறிப்பாக தடைதாண்டும் கல்வியாக புலமைப்பரிசில், சாதாரணதரப் பரீட்சை, உயர்தரப்பரீட்சை என்றும் மாணவனின் பருவநிலையை அடிப்படையாகக்கொண்டு அவனுக்கு கல்வியறிவை ஊட்டும் நோக்கில் எமது சமூகத்தின் கற்பித்தல் முறை உள்ளது.

கொவிட் - 19 தொற்றின் காரணமாக கற்பித்தல் முறைமையானது சூழ்நிலைக்கு ஏற்றாற்போலவும் மாணவர்களின் மனநிலைக்கு உகந்த வகையிலும் மாற்றமடையவேண்டும் என்பது மாற்றத்துக்கு உள்ளாகும் எவரும் மாற்றமடையவேண்டும் என்ற தத்துவார்த்தத்திற்கு உட்பட்டதாகும். இதுவரை பாடசாலை, கல்வி நிறுவனங்கள் ஊடாக மாணவர்கள் பயன்பெற்று வந்தார்கள். ஆனால் பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள் அனைத்தும் பல மாதங்களாக முடக்கப்பட்ட நிலையில் மாணவர்கள் கல்வியை கற்பதற்கு ஏதுவான சூழல் இல்லாத ஒரு துர்ப்பாக்கிய நிலையில் இருக்கிறார்கள். அதற்கு ஏற்றாற்போல் வீட்டிலிருந்தே தமக்கான கல்வியை, வீட்டை வகுப்பறையாக்கி தனிமையில் கற்கவேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

மாணவர்கள் தமக்கு தேவையான கல்வியறிவை பெற்றுக்கொள்ள பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதுடன் கல்விக்காக தவிக்கும் நிலையை உணர முடிகின்றது. இந்த காலப்பகுதியில் Ask Media குழுமத்தின் ஏற்பாட்டில் கல்வி தொலைக்காட்சி மிகப்பெரிய, பயிற்றப்பட்ட ஆசிரியர் வளத்துடன் தரம் 6 முதல் உயர்தரம் வரையிலான பாடங்களை இயன்றவரை பாடசாலைக் கல்வியில் கிடைக்கும் அதே தரத்துடன் செய்முறை விளக்கங்கள், உதாரணங்கள், படிமுறைகள் அதாவது விளக்கக் காட்சி (Presentation) என்பவற்றினூடாக கற்பித்தலை இலகுவாக்கி அதனை ஒளிப்பேழையாக்கி, ஒளிபரப்பாக்கி வருகின்றது. இதனூடாக மாணவர்களின் எதிர்ப்புக்கான ஒரு வழிகாட்டியாக கல்வி தொலைக்காட்சி அமையப் பெற்றிருக்கிறது என்பதே உள்ளங்கை நெல்லிக்கனி. கல்வி தொலைக்காட்சியின் நோக்கம் என்பது தொலைக்காட்சி வரலாற்றில் இன்னுமொரு பரிமாணம் என்றே குறிப்பிடலாம். தொலைக்காட்சி என்றாலே பாடலும், படமும் நாடகமும், கூத்தும் என்று இல்லாமல் எமது மாண வர்களின் நலன் என்பது இங்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது. Dan குழுமம் முன்னு தாரணமான ஒரு குடும்பமாக திகழ்கின்றது என்பது பெருமைக்குரியது.

இந்நிலையில் தற்போது தரம் 6 முதல் உயர்தர கணித விஞ்ஞான, கலை வர்த்தக பாட நெறிகளை ஒளிபரப்பாக்கி மாணவர்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்று மாணவர் மனங்களில் அறிவுப் பசியை ஊட்டும் ஒரு ஆசானாக கல்வித் தொலைக்காட்சி ஒன்று மாணவர்களுக்கான பாடத்திட்டத்தினை செவ்வனவே நிறைவேற்றி வெற்றி பெற்றுள்ளதுடன், பெற்றோர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் கல்விப் புலன்சார்ந்த பலராலும் பல எதிர்பார்ப்புகளுக்கு உள்ளாக்கப்பட்ட தொலைக்காட்சி தனது காலை இரண்டாவது இடத்திற்கு எடுத்து நடைபோட போகின்றது. இதன் நோக்கம் என்பது முன்பள்ளி பராயத்தில் இருந்து தரம் ஐந்து வரையான அனைத்து மாணவர்களின் நலன் கருதி இந்த அலைவரிசை 27.06.2021 உலக இயக்கத்தின் சக்தியான ஆதவனின் திருக்கரத்தில் கல்வித் தொலைக்காட்சி 2 உதயமாகிறது.

இந்த செய்தி மாணவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் என்பதோடு, அவர்களுடைய மனநிலையில் மாற்றத்தையும், கற்றல் தொடர்பான புதிய தொரு புரிதலையும் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. மாணவர்கள் நலன் கருதி இன்னொரு தளமாக அமையப் பெறும் இத்தொலைக்காட்சியில் ஆரம்ப படிநிலை மாணவர்கள் முதல் ஐந்தாம் ஆண்டு மாணவர்கள் வரை அனைத்து வகுப்பினருடனும் கூடிய ஒரு தொலைக்காட்சியாக பிரசன்னம் ஆக இருக்கின்றது. பிரசன்னத்தின் பயன்களை மாணவர்களாகிய நீங்கள் பெறுவதே உங்கள் திறன். மாணவர்களாகிய உங்களுக்கு ஏற்றாற்போல் செயல்திறனை வினைத்திறனாக மாற்றி பயன்பெற்றுக் கொள்ளுங்கள்.

# புத்தூரில் வீட்டுக்குள் புகுந்து வாள்வெட்டுக்குழு அட்டகாசம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்., புத்தூர் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த வாள்வெட்டு குழு வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களை அடித்து சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

குறித்த சம்பவம் நேற்றுமுன் தினம் இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புத்தூர் பகுதியிலுள்ள வீடு ஒன்றுக்குள் நுழைந்த வாள்வெட்டுக் குழுவினர் அங்கிருந்த 2 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வீட்டு உடைமைகள் என்பவற்றைச் சேதப்படுத்திவிட்டுச் சென்றுள்ளனர்.

3 மோட்டார் சைக்கிள்களில் வாள்களுடன் வந்த 6 பேர்கொண்ட குழுவினாலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. எனினும், குறித்த தாக்குதலுக்கான காரணம் எதுவும் வெளியாகவில்லை.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-3)

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை வாபஸ் பெறுமா ஐக்கிய மக்கள் சக்தி?

கொழும்பு, ஜூன் 27

அதிகரிக்கப்பட்டுள்ள எரிபொருட்களின் விலை மீள குறைக்கப்படுமானால் வலுசக்தி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை மீளப்பெறுவதற்கு தயார் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான பஸில் ராஜபக்ஷ நாட்டில் இருந்திருந்தால் எரிபொருட்களின் விலையை அதிகரிப்பதற்கு இடமளித் திருக்கமாட்டார் எனவும், அவர் நாடு திரும்பியதும் மக்களுக்கு நிச்சயம் நிவாரணம் வழங்கப்படும் எனவும் மொட்டு கட்சி உறுப்பினர்கள் அறிவித்து வந்தனர்.

தற்போது பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பியுள்ளார். எனவே, நிவாரணத் திட்டம் என்னவென்பதை அறிவிக்கவேண்டும் என்று சஜித் அணி பாராளுமன்ற உறுப்பினரான நிரோஷன் பெரேரா வலியுறுத்தினார்.

குறிப்பாக அதிகரிக்கப்பட்டுள்ள எரிபொருட்களின் விலை மீள குறைக்கப்படுமானால் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை மீளப்பெறுவதற்கு நாம் தயார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# துறைமுக நகர சட்டமூலம் மீதான வாக்கெடுப்பு; விசாரணை அறிக்கை சபாநாயகரிடம் கையளிப்பு

கொழும்பு, ஜூன் 27

கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பான வாக்கெடுப்பில் தவறு ஏற்பட்டதாக வெளியான குற்றச்சாட்டு தொடர்பாக இடம்பெற்ற விசாரணையின் அறிக்கை நேற்று சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணை அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகள் தொடர்பாக அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்படும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

இந்த வாக்கெடுப்பின்போது, வாக்குகள் சரியாக எண்ணப்படவில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் சபாநாயகருக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பான விரிவான விசாரணைகளை முன்னெடுக்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் அந்த கடிதத்தினூடாக கோரப்பட்டிருந்தது.

இதற்கமைய, சபாநாயகரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு ஏற்ப ஓய்வு பெற்ற பாராளுமன்ற பொதுச்செயலாளர் ஒருவரின் தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

# 182 கிலோ கேரள கஞ்சாவுடன் பூநகரியில் ஒருவர் சிக்கினார்

கிளிநொச்சி, ஜூன் 27

கிளிநொச்சி மாவட்டம், பூநகரியில் 182 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

பூநகரி இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், 58 வயதுடையவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடமிருந்து கப்ரக வாகனம், படகு மற்றும் அதற்கான இயந்திரம் என்பவற்றையும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட வாகனங்களுடன் குறித்த நபர் பூநகரிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கடல் மார்க்கமாகவே கேரள கஞ்சா இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் பூநகரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார். (இ-3)

**காணி விற்பனைக்கு**

இராச பாதை வீதி, கோப்பாயில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

T.P : 0777730567

### ஜனாதிபதியின்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதுதவிர, இலங்கையில் மூன்று தசாப்த காலமாக நிலவிய வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதில் இந்தியா உட்பட சர்வதேச சமூகம் வழங்கிய பங்களிப்பே முக்கியம் பெற்றிருந்தது.

இத்தகைய பின்னணியில் நாட்டு மக்களுக்கான உரையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ, இலங்கையின் உள்விவ காரங்களில் வெளியார் தலையீடுகளை அனுமதிக்கப் போதில்லை என்று கூறியுள் ளதை நோக்கும்போது, அழுவதா அல்லது சிரிப்பதா என்று தெரியவில்லை.

# 60 வீதமானோருக்கு நாட்டில் தடுப்பூசி

கொழும்பு, ஜூன் 27

நாட்டில் 60 சதவீதமானோருக்கு தடுப்பூசியேற்றுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார்.

கொவிட் தடுப்பூசியேற்றும் வேலைத்திட்டத்திற்காக அரசாங்கம் 425.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளது.

உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியன இதற்கான நிதியை வழங்குவதற்கு உடன்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி மேலும் கூறினார்.

## எந்தவொரு...

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல, நேற்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"அரசைக் கவிழ்க்க உள்ளேயும் வெளியேயும் சதி முயற்சிகள் நடக்கின்றன என்று ஊடகங்களின் செய்திகள் மூலம்தான் அறிந்துகொண்டேன். இது உண்மையா, பொய்யா என்று சதித் திட்டங்களைத் தீட்டுவோருக்குத்தான் தெரியும்.

எனினும், ஜனாதிபதி - பிரதமர் - அமைச்சர்கள் - இராஜாங்க அமைச்சர்கள் - ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஓரணியில்தான் செயற்படுகின்றார்கள். இதை மீறி கட்சிக்குள்ளே சதித்திட்டங்கள் நடக்கின்றன என்பதை நான் ஏற்றுகொள்ளமாட்டேன்.

அதேவேளை, அரசைக் கவிழ்க்க வெளியே நீண்ட நாட்களாகப் பல சதி முயற்சிகள் நடக்கின்றன. அதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். இதில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினர்தான் பிரதான வகிபாகம் வகிக்கின்றனர். அரசையும், மக்களையும், ஒட்டுமொத்த நாட்டையும் குழப்பும் வகையில் ஊடகங்களுக்கு அவர்கள் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

பஸில் ராஜபக்ஷ, தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்கவுள்ளார் என்ற தகவலைக் கூட எதிரணியினர்தான் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர். உண்மையில் இதுவரைக்கும் எம்.பியாகும் தீர்மானத்தை பஸில் ராஜபக்ஷ எடுக்கவில்லை. அவர் விரும்பினால் நாடாளுமன்ற வர முடியும். அவருக்காக அரசில் பலர் எம்.பி. பதவியை இராஜிநாமா செய்யத் தயாராகவுள்ளனர். பஸில் ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநர். எனவே, அரசில் அவரின் வகிபாகம் முக்கியம்" - என்றார். (இ)

## வெலிக்கடை...

கப்பட்டதை அடுத்து கைதிகள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட நாளிலிருந்து, அதனை ஆயுள் தண்டனையாக மாற்றுமாறு கைதிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களே எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார். இருந்தபோதிலும் கைதிகளின் ஆர்ப்பாட்டம் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே, மஹர மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, மரண தண்டனை விதிக்கப்பட்ட 260 பேரின் தண்டனையை, ஆயுள் தண்டனையாக மாற்றுவதற்கான யோசனை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை தெரிவித்திருந்தார்.

குறித்த கைதிகளின் பெயர்ப்பட்டியல் நீதி அமைச்சரினால் வழங்கப்பட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## கைதாவோரை...

முன்னிட்டு சர்வதேச மன்னிப்புச் சபையினால் அதன் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்யப்பட்டிருக்கும் பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் அல்லது அவரசகால நிலையின்போது கைதுசெய்யப்பட்டவர்களைப் புனர்வாழ்வுக்கு உட்படுத்துதல் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினால் பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழான புதிய நடைமுறைகள் வெளியிடப்பட்டன. அந்த நடைமுறைகள் உடனடியாக இடைநிறுத்தப்படவேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளைப் பொறுத்தமட்டில், புனர்வாழ்வளித்தல் நிலையங்களில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றாலும் அவற்றுக்கு எதிரான பாதுகாப்பு உறுதி செய்யப்படவில்லை. அதுமாத்திரமன்றி கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்களுடன் தொடர்புபட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையினால் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், இந்த நடைமுறைகளை நிறைவேற்றும் அதிகாரமையத்துடன் நெருங்கிய தொடர்பிலிருப்பதும் விசனத்தை ஏற்படுத்துகின்றது.

இவ்வாறான புனர்வாழ்வளித்தல் நிலையங்கள் கடந்த காலங்களில் எவ்வாறு இயங்கின என்பதையும் அங்கு பாலியல் வன்முறைகள் மற்றும் பாலினப்பாகுபாடுகள் உள்ளடங்கலாக எந்தளவிற்கு மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன என்பதையும் நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருக்கின்றோம்-என்று கூறப்பட்டுள்ளது.

## கொரோனாவால்...

மூவர் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகரைச் சேர்ந்த 62 வயதுடைய பெண் ஒருவரும் மன்னாரைச் சேர்ந்த 24 வயதுடைய ஆண் ஒருவருமே நேற்று முன்தினம் உயிரிழந்தனர்.

இருவரினதும் சடலங்களும் உரிய சுகாதார வழிகாட்டுதல்களின் அடிப்படையில் மின்தகனம் செய்யப்பட்டன.

மேலும் மூவர் நேற்று உயிரிழந்துள்ளனர்.

வடமராட்சி துன்னாலையைச் சேர்ந்த 60 வயதுடைய ஆண் ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார். அவர் இருதய நோயாளி என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற 65 மற்றும் 80 வயதுடைய ஆண்கள் இருவர் நேற்று உயிரிழந்துள்ளனர் என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

மூவரினதும் சடலங்களும் உரிய சுகாதார வழிகாட்டுதல்களின் அடிப்படையில் மின்தகனம் செய்யப்படவுள்ளன. (அ)

## 3 நாட்களில்...

களைத் திறப்பதற்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் 70 கோடி ரூபாவுக்கு விற்பனை இடம்பெற்றுள்ளது என மதுவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக தொடர்ச்சியாக கிட்டத்தட்ட ஒரு மாத காலம் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

கடந்த திங்கட்கிழமை பயணக் கட்டுப்பாடு நீக்கப்பட்ட நிலையில் 3 நாட்களில் மாத்திரம் நாடளாவிய ரீதியில் இவ்வாறு மது விற்பனை இடம்பெற்றுள்ளது என குறித்த திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் 4 ஆயிரத்து 200 மதுபான விற்பனை நிலையங்கள் உள்ளபோதிலும் கடந்த 21 மற்றும் 22, 23ஆம் திகதிகளில் 1409 மதுபான விற்பனை நிலையங்களுக்கு மட்டுமே திறப்பதற்கான அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

பயணக் கட்டுப்பாடு நீக்கப்பட்ட நாளில் நாடளாவிய ரீதியில் உள்ள மதுபான விற்பனை நிலையங்களில் மதுப்பிரியர்கள் அதிகளவில் குழுமியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

## எரிபொருளின்...

ஊழல் நிறைந்த அரசின் தன்னிச்சையான ஆட்சிக்கு எதிராக தாம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது எனவும், எரிபொருள் விலை குறைக்கப்பட வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கேட்டுக் கொண்டனர். (இ)

# கண்டி தலதா மாளிகைக்கு ஜனாதிபதி நேற்று விஜயம்



கொழும்பு, ஜூன் 27

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று பிற்பகல், கண்டியில் உள்ள வரலாற்று முக்கியத்துவமிக்க தலதா மாளிகைக்கு விஜயம் செய்து மத அனுஷ்டானங்களில் ஈடுபட்டார்.

தலதா மாளிகைக்கு விஜயம் செய்த ஜனாதிபதியை தியவதன நிலமே நிலங்க தேல வரவேற்றார்.

பின்னர், மல்வத்தை மஹா விஹாரைக்குச் சென்ற ஜனாதிபதி, மல்வத்தை பீடத்தின் மஹாநாயக்க தேரர் சங்கைக்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரைச் சந்தித்து, நலன் விசாரித்தார். மஹாநாயக்க தேரர் பிரித் பாராயணம் செய்து, ஜனாதிபதியை ஆசிர்வதித்தார்.

மல்வத்தைப் பீடத்தின் அநுநாயக்க தேரர் சங்கைக்குரிய திம்புல்கும்புரே விமலதம்ம தேரரையும் சந்தித்த ஜனாதிபதி, தேரரிடம் நலன் விசாரித்தார். அனுநாயக்க தேரருக்காக இலங்கைக் கடற்படையின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்டுவரும் சங்கவாசக் கட்டடத்தையும், ஜனாதிபதி பார்வையிட்டார்.

மல்வத்தை பீடத்தின் அனுநாயக்க தேரர் கலாநிதி சங்கைக்குரிய நியங்கொட விஜித்த தேரரையும் சந்தித்த ஜனாதிபதி, அவர்களிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்.

நாட்டின் தற்போதைய அரசியல், சமூக மற்றும் பொருளாதார விடயங்கள் குறித்து, மகாநாயக்க தேரர்கள் மற்றும் அனுநாயக்க தேரர்களுக்கு ஜனாதிபதி இதன்போது விளக்கினார்.

# டெல்டா வைரஸ் இலங்கை முழுதுமே பரவும் ஆபத்து!

கொழும்பு, ஜூன் 27

டெல்டா திரிபு குறித்து கவனயீனத்துடன் செயற்பட்டால், அது இலங்கை முழுவதும் பரவும் அபாயம் ஏற்படக்கூடும் என விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

நீண்ட பரிசோதனைகளுக்கு அமையவே, வைரஸ் திரிபுகளை வெவ்வேறாக அடையாளம் காண முடியும். இந்தியாவில், முதல்முறையாக டெல்டா திரிபு தொற்று உறுதியானவர்கள் அடையாளம் காணப்பட்டு, சில மாதங்களின் பின்னரே பரவல் நிலை ஏற்பட்டது.

பரவுவதற்கு இடமளித்தால் மாத்திரமே, வைரஸ் வேகமாக தீவிரமடையும். சுகாதார விதிமுறைகளை உரிய முறையில் கடைப்பிடிக்காமையே இந்தப் பரவலுக்கு காரணமாகும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர், விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் கூறினார்.

## கொரோனா...

யல் பிரிவு குறித்த தகவலை நேற்று வெளியிட்டது.

இதனால் இலங்கையில் இதுவரை கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2905 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உயிரிழந்தவர்களில் பெண்கள் 18 பேரும், ஆண்கள் 25 பேரும் உள்ளடங்குவதாகவும் பெண்களில் இருவர் 39 தொடக்கம் 50 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும்,

ஆண்களில் ஒருவர் 30 வயதுக்கு உட்பட்டவர் என்றும், 05 பேர் 30 தொடக்கம் 59 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## நேற்று 1,801...

ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 51 ஆயிரத்து 727 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 172 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 16 ஆயிரத்து 840 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 31 ஆயிரத்து 982 ஆக அதிகரித்துள்ளது.

## தடுப்பூசி...

மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுபவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது.

நேற்று, ஆடைத்தொழிற்சாலையில் தடுப்பூசி செலுத்திய சாவகச்சேரியிலுள்ள இரண்டு யுவதிகள், ஒவ்வாமை காரணமாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

## எக்ஸ் - பிரஸ்...

டொலர் கேட்டிருந்த நிலையில், 36 இலட்சம் அமெரிக்க டொலர் வழங்க "எக்ஸ் - பிரஸ் பீடர்ஸ்" நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

கப்பல் விபத்தால் வாழ்வாதாரத்தை இழந்த மீனவர்களுக்கு இந்தத் தொகை பங்கிடப்படவுள்ளது என இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மீனவர்களின் நட்டஈடு கோரிக்கை தொடர்பாக ஆராய்ந்து, 72 கோடி ரூபாவைப் பங்கிட்டுக் கொடுக்க அரச அதிகாரிகளை உள்ளடக்கிய குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (இ)

ஈழநாடு
Eelanadu

# அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி வெலிக்கடை சிறைக்கு முன் ஆர்ப்பாட்டம்

## சாணக்கியன் எம்.பியும் பங்கேற்பு

**கொழும்பு, ஜூன் 27**

**தண்டனைக் காலம் நிறைவடைகின்ற அரசியல் கைதிகள் 16 பேரை அரசு விடுவித்துள்ள நிலையில், ஏனையவர்களையும் விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வெலிக்கடை சிறைச்சாலைக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

இதன்போது, கைதிகளின் நலனுக்காகச் செயற்படும் அமைப்புடன் இணைந்து பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டு பதாதைகளை ஏந்தியவாறு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் மற்றும் ஏனையவர்களைச் சித்திரவதை செய்து துன்புறுத்துவதை நிறுத்த வேண்டும், ஏனைய கைதிகளுக்கும் நியாயம் கிடைக்க வேண்டும் என்று பாதாதைகள் ஏந்தப்பட்டிருந்தன.




சர்வதேச சித்திரவதைக்கு எதிரான தினத்தை முன்னிட்டு குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொலைக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட ஒருவருக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும் போது, முகநூலில் பதிவிட்ட இளைஞர்களை விடுவிக்காமல் இருப்பது ஏன் என்றும் போராட்டக்காரர்கள் கேள்வி எழுப்பினர்.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனும் பங்கேற்றார். (இ)



சீன இராணுவச் சீருடை சர்ச்சை:

# திஸ்ஸ குளத்தின் தூர்வாரும் திட்டம் இடைநிறுத்தப்பட்டது

கொழும்பு, ஜூன் 27

அம்பாந்தோட்டைப் பகுதியிலுள்ள திஸ்ஸ குளத்தை தூர்வாரும் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது எனத் தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் அனுர மனதுங்க தெரிவித்துள்ளார்.

சீன இராணுவச் சீருடையை ஒத்த உடை அணிந்து குளத்தைத் தூர்வாரும் திட்டத்தில் ஈடுபட்ட சீனப் பிரஜைகளால் திஸ்ஸ குளம் தொடர்பான சர்ச்சை மேலெழுந்தது.

திஸ்ஸ குளத்தின் அபிவிருத்தித் திட்டத்தில் சீன இராணுவச் சீருடையை ஒத்த உடை அணிந்தவர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்று எதிர்க்கட்சியினர் கேள்வி எழுப்பியதைத் தொடர்ந்து சர்ச்சை ஏற்பட்டது.

இந்நிலையில், தம்மிடம் முறையான அனுமதிகள் எதுவும் இன்றி குளத்தை தூர்வாரும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது எனத் தெரிவித்துள்ள தொல்பொருள் திணைக்களம், திட்டத்தை இடைநிறுத்தப் பணிப்புரை விடுத்தது.

குளத்தைத் தூர்வாருவதற்கு முறையான அனுமதி பெறப்பட்ட பின்னர் திட்டத்தை மீண்டும் தொடர முடியும் என்று தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

இந்தத் திட்டத்தில் சீன இராணுவத்தினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர் என்று வெளியான செய்தியை ஆளும் கட்சியும் சீனத் தூதரகமும் மறுத்துள்ளன.

குளத்தைத் தூர்வாரும் திட்டம் சீனாவின் லியோனிங் ஹாங்க்செங் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# ஹெரோயின் போதைப்பொருளுடன் மூவர் கைது!

கொழும்பு, ஜூன் 27

ஹெரோயின் போதைப்பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிங்கிரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 107 கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதேபோன்று களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 110 கிராம் ஹெரோயினுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் தொடர்பான ஏதேனும் தகவல்கள் தெரிந்தால் 1997 என்ற இலக்கத்துக்குத் தொடர்பு கொண்டு தகவல் தருமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண கேட்டுக்கொண்டுள்ளார். (இ)

## உலக சுகாதார ஸ்தாபனத்தின்

# புதிய வதிவிடப் பிரதிநிதியுடன் வெளியுறவு அமைச்சர் சந்திப்பு



கொழும்பு, ஜூன் 27

இலங்கைக்கான உலக சுகாதார ஸ்தாபனத்தின் புதிய வதிவிட பிரதிநிதி கலாநிதி அலாகா சிங், வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோருக்கு இடையே சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

வெளியுறவு அமைச்சில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் புதிய வதிவிட பிரதிநிதிக்கு வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை 1952 ஆம் ஆண்டு முதல் உலக சுகாதார ஸ்தாபனத்துடன் பேணி வரும் உறவுகளை வெளியுறவு அமைச்சர் நினைவுபடுத்தியுள்ளார். உலக சுகாதார ஸ்தாபனம் கோவிட் தடுப்பு நடவடிக்கைகளில் இலங்கைக்கு வழங்கும் ஒத்துழைப்புகளுக்கு வெளியுறவு அமைச்சர் நன்றி தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளில் இலங்கைக்கு தொடர்ந்தும் ஒத்துழைக்கவுள்ளதாக கலாநிதி அலாகா சிங் தெரிவித்துள்ளார். (இ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.06.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-சம்திங் சம்திங்
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்- திறமையாளர்களுக்கான களம்

**இரவு**
7.00 மணி : SPOTLIGHT- தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் M.A சுமந்திரன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி :செல்லாடுகளம்



10.00 மணி:-நேர்கொண்ட பார்வை-மட்டக்களப்பு மாவட்ட நடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்



## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு